# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 21 திங்கட்கிழமை (03-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:110


## ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் மறைந்திருந்து தாக்குதல்

### கிழக்கில் நேற்றுச் சம்பவம்

மட்டக்களப்பு,ஏப்ரல்.3

மட்டக்களப்பு - அம்பாறை எல்லையில் உள்ள கோணகலை இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலின் போது பல (12ஆம் பக்கம் பார்க்க)

## பளையிலிருந்து ஆயிரம் பேர் நேற்று மிருசுவில் வந்தனர்!

யாழ்ப்பாணம்,ஏப்ரல்3

பளை மற்றும் அயல் கிராமங்களில் இருந்து சுமார் ஆயிரம் பேர் கிளாலி ஊடாக நேற்றுப் பிற்பகலில் மிருசுவில் வந்து சேர்ந்தனர்.

பளையில் இருந்து வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் விடுத்த அறிவிப்பை அடுத்து பளை நகரத்தையும் அதனை அண்டிய கிராமங்களையும் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் பேர் புலோப்பளைக்குச் சென்றனர்.

அங்கிருந்து அவர்கள் மிருசுவில் பகுதிக்கு செல்வதற்காக கிளாலி ஆலடிக்குச் சென்றனர்.

ஆயிரம் பேரை மட்டும் மிருசுவிலுக்கு செல்ல அனுமதி வழங்கிய படையினர் எஞ்சியோரை கிளாலியில் உள்ள மாதா கோயிலில் தங்க வைத்துள்ளனர்.

உயர் இடத்தில் இருந்து அனுமதி கிடைக்காததால் மிருசுவிலுக்கு செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

அதே சமயம் - பளையில் வண்ணாங்கேணி, தம்பகாமம், முல்லையடி, அரசகேணி, சோரன்பற்று, மாசார், தர்மக்கேணி, சின்னத்தாழையடி ஆகிய இடங்களில் உள்ள மக்களை இடம்பெயர படையினர் அனுமதிக்கவில்லை எனக் கூறப்பட்டது.

இடம்பெயர்ந்துவரும் மக்களுக்கு மிருசுவில் பங்குத்தந்தை உணவு வழங்கி வருகிறார்.

இதேசமயம் நேற்று முன்தினம் மாலையும் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் கிளாலியூடாக மிருசுவில் வந்து சேர்ந்தனர். பளையிலிருந்து 8மைல் தூரத்தைக் கால் நடையாகவே கடந்து இவர்கள் மிருசுவிலையடைந்தனர்.(இ-3-31-117-111)

# புலிகள் வசம் உள்ள பகுதிகளை

# மீட்க படை நடவடிக்கை ஆரம்பம்!

## முகமாலையில் கடும் சண்டை

கொழும்பு,ஏப்ரல்3

**யாழ்ப்பாணம் - கண்டி வீதியில், முகமாலைக்கும் பளைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியைக் கைப்பற்றுவதற்காக பாதுகாப்புப் படையினர் நேற்று 'வலி சக்கர' என்னும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.**

புலிகளிடம் இருந்து எழுதுமட்டுவாழ் பகுதிகளை விடுவிப்பதே இந்த இராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - கண்டி வீதியில் முகமாலை வரை அமைந்துள்ள தமது நிலைகள்மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட பெரும் எடுப்பிலான தாக்குதலை தாம் முறியடித்துவிட்டதாகவும் -

இந்தத் தாக்குதலின் போது 50 கலிபர் துப்பாக்கி பொருத்தப்பட்ட பவள் கவசவாகனம் ஒன்று தம்மால் மீட்கப்பட்டுள்ளதாகவும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அதே சமயம் முகமாலைப் பகுதியில் புலிகளின் நிலைகள் மீது நேற்று ஹெலிகள் தாக்குதல் நடத்தி இருந்தன என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-க-3-7-8)

### தனங்களப்பில் புலிகள் ஷெல் வீச்சு

கொழும்பு,ஏப்ரல்3

தனங்களப்பில் உள்ள படையினரின் நிலைகள் மீது கடந்த வெள்ளியன்று மாலை 6.25 மணியளவில் விடுதலைப் புலிகள் கடுமையான ஷெல் தாக்குதலை நடத்தினர் என பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதேசமயம் -

நாகர்கோயில் பகுதியில் இருந்து படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் புலிகளின் மூன்று பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன என்று படைத்தரப்பு அறிவித்துள்ளது.

முகமாலைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததாகவும் படைத்தரப்பு அறிவித்துள்ளது. (இ-3-7)

## பளை மக்களை வெளியேற்ற படையினருடன் ஆயர் தொடர்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்3

பளையில் சிக்கியுள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர அனுமதிக்குமாறு யாழ்.ஆயர் அதி வண.தோமஸ் சௌந்தரநாயகம் பலாலி படை அதிகாரிகளைக் கோரியுள்ளார்.

தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள ஆயர், பலாலிப் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அதே சமயம் - யாழ். ஆயர் இல்லத்தைச் சேர்ந்த வண பிதாக்களும், மிருசுவில், கிளாலி பங்குத்தந்தைகளும் கிளாலியில் தங்கியிருந்து மக்களை அழைத்து வருவதில் முழுமையாக ஈடுபட்டுவருகின்றனர். (இ-3)

## ஐ. நா. தூதரக அதிகாரியுடன் படை அதிகாரி இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்3

குடாநாட்டில் மக்களின் இடம்பெயர்வு தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்னவுடன் இன்று பேசவிருக்கின்றனர்.

இடம்பெயரும் மக்களுக்கு வழங்க வேண்டிய உதவிகள்தொடர்பாகவும்- பளையில் சிக்கியுள்ள மக்களை அப்புறப்படுத்துவது தொடர்பாகவும்- இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவிருப்பதாகக் கூறப்பட்டது.

## இயக்கச்சிக்கு வட மேற்கே சனி அதிகாலை மோதல்!

கொழும்பு,ஏப்ரல்.3

இயக்கச்சிக்கு வடமேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணிமுதல் படையினருக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சமர் இடம்பெற்றுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பலமணி நேரம் நீடித்த இந்தச் சண்டையில் ஒரு பகுதியை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாக படைத் தரப்பு கூறியதாக கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

அதேசமயம் இந்த மோதலில்17 படையினர் உயிரிழந்தனர்; 2 அதிகாரிகளும் 26 படையினரும் படுகாயமடைந்தனர். 3 அதிகாரிகளும் 63 படையினரும் சிறுகாயமடைந்தனர் என்று படைத்தரப்பு தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் தரப்பில்34 பேர் உயிரிழந்தனர் என்றும் -

அவர்களில் 21 பேரின் சடலங்களைக் கைப்பற்றியதாகவும்படைத் தரப்பு மேலும் கூறியது.

நாகர்கோயில், முகாவில், முகமாலை, ஓமந்தை ஆகிய இடங்களிலும் சமர் இடம்பெற்றதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-க-3-7-8)

## பளை ஆஸ்பத்திரி செயலிழப்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்3

பளைப்பகுதியில் நிலவும் யுத்த சூழலை அடுத்து பளை ஆஸ்பத்திரியை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

பளைப்பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேறிவருவதனாலும் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதியர்களும் ஊழியர்களும் இடம்பெயர்ந்துள்ளதாலும் டாக்டர் எஸ்.அம்பிகைபாகன் மட்டுமே அங்கிருந்து சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அத்துடன் மிகமுக்கிய மருந்துப் பொருள்களுக்கும் மேற்படி ஆஸ்பத்திரியில் கடும் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வயோதிபர் உட்பட மூவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

### புலோப்பளை, வண்ணான்கேணியில் சம்பவம்

புலோப்பளை, வண்ணான்கேணி மற்றும் தம்பகாமம் பகுதிகளில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இரு வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் வயோதிபர் ஒருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.

புலோப்பளை காணிக்கை மாதா ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் எஸ். சுவர்க்கீன் (வயது 85-புலோப்பளை) என்பவர் உயிரிழந்தார்.

அதிகாலைவேளை மலசலம் கழிக்கச் சென்றவேளை அங்கு படுத்திருந்த சிலர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வண்ணான்கேணி மற்றும் தம்பகாமம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஹிப்பி கந்தசாமி, செல்வம் மாஸ்ரர் ஆகியோர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் சுவர்க்கீனின் சடலம் பளைப் பொலீஸாரால் நேற்றுப் பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த சிவானந்த சர்மா சசிகரசர்மா (வயது 12 - பளை), தம்பிப்பிள்ளை கோகுலர் (வயது 82 - பளை) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரிக்கும் -

ராஜேந்திரன் மகிந்தன் (4 மாதம் - பளை), ஜெயக்குமார் மிசாலினி (வயது 9 - பளை) ஆகியோர் நேற்று சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

## சமாதான முயற்சிக்கு எதிராக பிக்குகள் கண்டனப் பேரணி

### வியாழனன்று நடத்த பௌத்த பீடங்கள் முடிவு

கொழும்பு,ஏப்ரல்3

அரசின் தீர்வு முயற்சி, நோர்வேயின் பங்களிப்பு, புலிகளுடன் பேச்சு நடத்துவது ஆகியவற்றுக்கு எதிராக நான்கு பௌத்த பீடங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பிக்குகள் எதிர்வரும் வியாழக்கிழமை கண்டனப் பேரணி ஒன்றை நடத்திவிருக்கின்றனர்.

மல்வத்த, அஸ்கிரிய, அமரபுர, ராமிய நிக்காய ஆகியவற்றைச் சேர்ந்த பிக்குகளே இந்தப் பேரணியை நடத்தவிருக்கின்றனர்.

பொறளையில் உள்ள பௌத்த இளைஞர் கழகத்தில் இருந்து நடத்தப்படும் இந்தப் பேரணியைத் தொடர்ந்து அங்கு கூட்டம் ஒன்றும் நடத்தப்படும்.

பேரணிக்கு ஜாதிக சங்க சபா, தேசிய இணைப்புக்குழு, பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பு ஆகியன ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

மலிவு! மலிவு!! மலிவு!!!

அதிசயம் ஆனால் உண்மை!!

இன்று முதல் பொங்கிவரும் புத்தாண்டை முன்னிட்டு நேரடியாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தபடியால் புடைவைத் தினுசுகள் அனைத்துக்கும் மாபெரும் அதிரடித் தள்ளுபடி!

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

(புடைவைத் தினுசுகளின் இராஜமுத்திரை)

ஒரு லெந் சூட்டிங் விலை – 150/= மட்டுமே!

இன்னும் பல பல சலுகைகள்! கையிருப்பு குறைந்தளவே!

இன்றே உங்கள் புதுவருட ஆடைத் தெரிவுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

CITY TEX & TAILORS

(Specialist in Wedding Coats & Suits)

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

T.P:2671 (C/11626)



## முக்கிய அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக

3ஆம் வருட முகாமைத்துவ வணிக மாணவர்களுக்கான

**கலந்துரையாடல்**

நாளை (04-04-2000) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் சகல மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

(75026) 3ஆம் வருட பிரதிநிதி



புதுவருடத்தை முன்னிட்டு

லிங்கம்ஸ்

சில்க்ஹவுஸ்

(மேல்மாடி)

மாபெரும் மலிவு விற்பனை

| | |
|---|---|
| 1 லெந் சூட்டிங் | 200/= |
| 4 சாறிகள் | 1000/= |
| 1 மாட்டின் சேட் | 200/= |
| 1 சிறுவர் மாட்டின் | 175/= |
| 1 சைனா துவாய் | 150/= |
| 1 செக் சேட் | 180/= |

மற்றும்

ரீ-சேட், காஞ்சிபுரம், மணிப்புரி, பேபி சூட் இன்னும் பல!

சொந்த கையிருப்பே உண்டு.

விரையுங்கள்!

லிங்கம்ஸ் சில்க்ஹவுஸ்

இல.18, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

T.P.2138

✱ திருமண ஆடைத் தேர்வில் பிரசித்தி பெற்றது. (C/11624)


தீவகக் கல்வி வலயத்தில்

# மேலும் 15 பயிலுநர் ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்3

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய மேலும் 15 பேர் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்று 3ஆம் திகதி முதல் செயற்படும்படியாக மேற்படி ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் வேலணை, வங்காளவடிச் சந்தியில் உள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் தமக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் - வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

ஆசிரியர் நியமனம் பெற்றோர் பெயர் விவரங்கள் வருமாறு:-

செல்வி நகுலராணி நாகரத்தினம் (வேலணை மேற்கு),செல்வி பிருந்தா நமசிவாயம் (புங்குடுதீவு), செல்வி சித்திராதேவி பரராஜசிங்கம் (நயினாதீவு), நடராஜா மயூரன் (நெடுந்தீவு), மரியசீலன் ஜோர்ச் கிளமென்ற் (நெடுந்தீவு), செல்வி பாக்கியசெபநாயகி றோபட் சிலுவைராசா (கரம்பன் தெற்கு), அருட்சகோதரி சாந்தி பிறேஸ் பேதுருப்பிள்ளை (கரம்பன்), செல்வி றோபட் சிலுவைராஜா றோஸ் ஒரிமா (கரம்பன் தெற்கு), பரநிருபசிங்கம் சுரேஸ்குமார் (நயினாதீவு), செல்வி கவிதா சாம்பசிவம் (நயினா

(12ஆம் பக்கம் பார்க்க)

## பளையிலிருந்து வந்தவர் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

பளைப்பகுதியில் இருந்து வெளியேறி கால்நடையாக வந்து சேர்ந்தவர்களில் ஒருவர் காயமடைந்தார்.

வானில் ஏற முற்பட்டவேளை இவர் தவறிவிழுந்து காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தானையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் புலோப்பளையைச் சேர்ந்த வாரித்தம்பி கணேசலிங்கம்(வயது 43) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)


கணக்கீடு

திரு. பாலவாசன்

A/L 2001

புதியபிரிவு

ஆரம்பம்:4-4-2K→6.20a.m

நல்லூர்

சயன்ஸ் அக்கடமி (75027)



ராஜா

யாழ்ப்பாணம்

4ஆவது வெற்றி வாரமாக

ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த

படையப்பா

காட்சிகள்

(C/11604) 10.30,2.30



லிபேட்டி

அச்சுவேலி

இன்றும் நாளையும்

சிவாஜி - ஜெயசித்ரா கமல் மற்றும் பல நட்சத்திரங்களின் நடிப்பில்

சத்யம்

காட்சிகள்:- 10.30, 2.30

T.P - 070 - 212223

- 070 - 212678

Fax No.0094 - 70212223 (74706)



நாகம்ஸ்

சுன்னாகம்

கடைசி வாரம்

ரம்யாகிருஷ்ணன், சௌந்தர்யா நடித்த

அம்மன்

(ரீல்ஸ்)

காட்சிகள் 11.00, 2.30

(புதிய நேரம்)

மனிதர்களைப் பேய்களுக்காகக் கொலை செய்யும் சம்பவங்கள் நிறைந்த காட்சி

(C/11617)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்துலிங்கம் கமலாதேவி

வல்வெட்டித்துறையைப்பிறப்பிடமாகவும் மானிப்பாய் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துலிங்கம் கமலாதேவி நேற்று (02-04-2000) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் வல்வெட்டித்துறை காலஞ்சென்ற நவரத்தினம் தம்பதிகளின் புதல்வியும் சுதுமலை வடக்கு காலஞ்சென்ற சின்னையா ஆறுமுகம் தம்பதிகளின் மருமகளும் ஆறுமுகம் முத்துலிங்கத்தின் அருமை மனைவியும் ஸ்ரீபார்த்தன், ஸ்ரீசயந்தன், நந்தினி (உடுவில் மகளிர் கல்லூரி-உயர்தர மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயராணி, இரத்தினராசா, செல்வராணி, குமரேசன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காளிராசா புவனேஸ்வரி, இராசதுரை சரஸ்வதி, பட்டு அழகேந்திரராசா, ரூபா, சண்முகராசா, ரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*
(75030)

தகவல்:
**நவரத்தினம் குமரேசன்**
(சகோதரன்)

## திருமதி இரத்தினாம்பிகை செல்வரத்தினம்

மாதகல் கிழக்கைச் சேர்ந்த சமாதான நீதிவான் திருமதி இரத்தினாம்பிகை செல்வரத்தினம் அவர்கள் நேற்று (02-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசசுந்தரம் செல்வரத்தினம் (முன்னாள் கணக்காளர், மக்கள்வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற J.P.முகாந்திரம் தம்பு-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் DR.சிவநேசன் (ஆயுள்வேதம்), அமரர் இந்திரபாலா, அமரர் செல்வராணி வன்மீகநாதன், லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் பொற்கலை, கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் சர்மிளா, அஜந்தன், றம்மியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசையா, செல்லையா, விக்கினேஸ்வரன், குமாரசாமி ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-04-2000) திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் நடைபெற்று பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாதகல் கிழக்கு,*
*மாதகல்.*
(75036)

தகவல்:
செ.லிங்கேஸ்வரன்
(மகன்)

## திருமதி றுத் செல்லம்மா கந்தையா

(இளைப்பாறிய தலைமைஆசிரியை, காசிப்பிள்ளை வித்தியாலயம்)

நல்லூர் செங்குந்தா வீதியைச் சேர்ந்த காசிப்பிள்ளை வித்தியாலய இளைப்பாறிய தலைமைஆசிரியை திருமதி றுத் செல்லம்மா கந்தையா (செல்லம்மா வாத்தியார்) நேற்று (02-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நொத்தாரிசு டானியல் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் கணபதிப்பிள்ளையின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற ஜீவகிரீடம் (பொறியியலாளர், தொலைத்தொடர்பு திணைக்களம்), பரமானந்தம் (கனடா) டாக்டர் விவேகானந்தன் (லண்டன்), காலஞ்சென்ற டாக்டர் அருளானந்தம்,சத்தியதேவிபாக்கியநாதன் (இளைப்பாறிய விரிவுரையாளர், விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிறிஸ்ரி கந்தையா, காலஞ்சென்ற திருமதி பெல்லா சின்னத்துரை ஆகியோரின் சிறியதாயாரும் பொன்மலர் கிறேஸ் (லண்டன்), தவமலர் (கனடா) பாக்கியநாதன் (பிரதி அதிபர், சென்தோமஸ் கல்லூரி, கல்கிசை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03-04-2000) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக சென்.ஜேம்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*21, செங்குந்தா வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு.*
(C/11625)

தகவல்;
**திருமதி.ச.பாக்கியநாதன்**
(மகள்)

## கந்தர் தங்கராஜா

தென்புலோலி சிங்கைநகரைப்பிறப்பிடமாகவும் டென்மார்க்கினைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் தங்கராஜா அவர்கள் 16-02-2000 புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் செல்வமணியின் பாசமிகு கணவரும் த.புன்னீர்ச்செல்வம் (கிராமஉத்தியோகத்தர், அல்வாய் மத்தி, அல்வாய்), சூரியகுமார், தயகுமார், இராஜ்குமார் (டென்மார்க்), திருமதி.கிருஷ்ணகுமாரி (இந்தியா), திருமதி.வை.இந்திரகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், மரியராணி, கிருஷ்ணகுமாரி (டென்மார்க்),மகேஸ்வரமூர்த்தி (நோர்வே), வைகுந்தமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ரஜிதா, சகிலன், லகிலன், சாருதி, சுருதி, பெற்றீனா, இலங்கா, சுஜீத் ஆகியோரின் அன்புப் பேரனும் சரஸ்வதி, காலஞ்சென்ற சின்னராசா மற்றும் யோகம்மா, மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-04-2000) திங்கட்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*சிங்கைநகர்,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*

தகவல்:
**வி.ஜீ.தங்கவேல் (ஜே.பி)**
(75032)


குளிர்மையின் மறுபெயர்!

NIPPON

இலங்கையில் அதிகூடிய தெரிவு 30க்கும் மேற்பட்ட மாதிரிகள்!

மின்விசிறிகள்

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC.

LANKA NIPPON

'தரத்தின் சின்னம்'

No.18,Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.

# கூட்டுறவு ஊழியருக்கான புதிய சம்பளத்திட்டம் அமுலாகவில்லை

அரியாலை, ஏப்ரல் 3

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான அதிகரித்த புதிய சம்பளத்திட்டம் யாழ். குடாநாட்டில் இதுவரை எந்த கூட்டுறவுச் சங்கங்களாலும் அமுல்படுத்தப்படவில்லை என்று அறியப்படுகிறது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் புதிய சம்பளத்திட்டத்தை அமுல்படுத்துமாறு கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு கடந்த டிசெம்பர் மாத இறுதியில் அறிவித்திருந்தது.

கூட்டுறவுச்சங்கங்களில் நிலவும் நிதி நெருக்கடி, ஆளணி அங்கீகாரம் இதுவரை பெற்றுக்கொள்ளாமை ஆகிய காரணங்களால் சம்பளத்திட்டத்தை உடனடியாக அமுல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் புதிய சம்பளத்திட்டம் அமுல் செய்யப்படாதது குறித்து கூட்டுறவுப் பணியாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

[ஐ-ரி-17]

## ஆளணி அங்கீகாரம் பெற்றே சம்பளத் திட்டத்தை அமுல்செய்க

### கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணிப்பு

அரியாலை, ஏப்ரல் 3

இதுவரை ஆளணி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாத கூட்டுறவுச் சங்கங்கள் அதற்கான விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்துப் பணியாளர்களின் பதவி நிர்ணயம் மேற்கொண்ட பின்னரே புதிய சம்பளத் திட்டத்தை அமுல்படுத்த முடியும்.

இவ்வாறு வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பணியாளர்களின் பதவி நிர்ணயத்தை மேற்கொண்டு அது குறித்துக் கூட்டுறவு ஆணைக்குழுவிடம் அனுமதி பெறுவது முக்கியமானது.

இந்தச் சம்பளத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குச் சங்கத்தின் நிதிநிலைமை பற்றிய மதிப்பீடு ஒன்று மேற்கொள்வது அவசியம். நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகரித்த சம்பளத்தை வழங்கமுடியாது இருக்கும்.

மீளாய்வு செய்து அமுல்படுத்தப்படவுள்ள சம்பளத் திட்டத்தை சகல விவரங்களுடனும் தங்கள் பகுதிக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் சமர்ப்பித்து அவரின் அனுமதியைப் பெறல் வேண்டும்.

இவ்வாறு சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-15)

## வலி. கிழக்குப் பிரதேச செயலக நடமாடும் சேவை ஆரம்பம்

வலி. கிழக்கு, ஏப்ரல் 3

வலி. கிழக்குப் பிரதேச செயலக நடமாடும் சேவை அச்சுவேலி உப அலுவலகத்திலும், ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும் மாதத்தில் ஒருநாள் நடைபெற உள்ளது.

முதலாவது நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை அச்சுவேலியில் நடைபெறும்.

ஊரெழுவில் முதலாவது சேவை இம் மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறும் என பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலியில் நடைபெறும் நடமாடும் சேவை மாதத்தின் முதலாவது செவ்வாய்க்கிழமையிலும், ஊரெழுவில் மாதத்தின் நான்காவது செவ்வாய்க்கிழமையிலும் இச்சேவை தொடர்ந்து நடைபெறும் என்றும் —

பொதுமக்கள் தமது பிரச்சினைகளை இங்கே தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-ரி-180)

## 50 கிராம அலுவலர்களின் இடமாற்றம் நிறுத்திவைப்பு

மட்டக்களப்பு, ஏப்ரல் 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்ட 50 கிராம சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களையும் மே22 ஆம் திகதி வரை இடைநிறுத்தி வைக்குமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்றநீதிபதி ஏ. என். இராமச்சந்திரன் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் சார்பில் சட்டத்தரணி பேரின்பம் பிரேம்நாத் சமர்ப்பித்த இடைக்காலத்தடை உத்தரவு மனுவை ஏற்றுக்கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அங்குள்ள ஏழு பிரதேச செயலாளர்களுக்கும் எதிராகஇந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அரச அதிபரும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களும் பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையை மீறி மாவட்டத்திலுள்ள 50 கிராம சேவை உத்தியோகத்தர்களையும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்திருந்தனர்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 26-7-1999 திகதிய சுற்றறிக்கையின்படி ஜனவரி மாதத்திலேயே இடமாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்றும் இடம்மாற்றப்படும் கிராமசேவை உத்தியோகத்தர்களின் கல்வி இதனால் பாதிக்கப்படாதிருக்க வேண்டும் என்றும் —

50 வயதிற்குட்பட்டவர்களும் 10 வருடத்திற்கு மேல் சேவையாற்றியவர்களுமே இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறியே இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி இடைக்கால உத்தரவை பிறப்பித்ததுடன் மே 22 ஆம் திகதி மாவட்ட அரச அதிபரும் சம்பந்தப்பட்ட ஏழு பிரதேச செயலர்களும் மன்றில் ஆஜராகி தமது விளக்கத்தை அளிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

(ஐ - 5 - 21)

## வகுப்பறையை புனரமைக்க நிதி உதவி

சண்டிலிப்பாய், ஏப்ரல் 3

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் உள்ள தற்காலிக வகுப்பறைக் கொட்டகைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியை வழங்குவதற்கு 'போரூட்' நிறுவனம் முன்வந்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து 'போரூட்' நிறுவன யாழ். மேற்குப் பிரிவுத் திட்ட அமைப்பாளர் கே. குணானந்தன் இந்த நிதியினை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தற்காலிக கொட்டகைகளின் நிலத்திற்கு சிமெந்து போடுவதற்கும் கூரையைப் புனரமைப்புச் செய்வதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

(ஐ-135)

## கருத்தரங்கு

கொழும்புத்துறை, ஏப்ரல் 3

யாழ். மரியாயின் சேனையாளரின் ஆத்மீக கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறும்.

அதன்பின்பு மரியாயின் சேனை கொமிசியக் கூட்டமும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

(ஐ-30)

## பண்டிகை முற்பணம்

அரியாலை, ஏப்ரல் 3

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பண்டிகைக் கால முற்பணத்தை சங்கப் பணியாளர்களுக்கு வழங்கவுள்ளது.

பண்டிகைக்கால முற்பணமாக இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டுவருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

## தராசுகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, ஏப்ரல் 3

வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச சபையின் உபஅலுவலகமான நெல்லியடியில் எதிர்வரும் 6 ஆம்10 ஆம் 14 ஆம் 20 ஆம் 25 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நிறுத்தல், அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதியில் உள்ள சகல சந்தை வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், விறகு காலையைச் சேர்ந்தவர்கள், பேக்கரி உரிமையாளர்கள், மில் உரிமையாளர்கள் யாவரும் தத்தமது தராசுப்படிகளுக்கும் நிறுவை அளவை உபகரணங்களுக்கும் தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தின் பரிசோதகர் வை. கிருஷ்ணதாசன் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

# செய்திக் கொத்து

## நூல்கள் அன்பளிப்பு

கொழும்புத்துறை,ஏப்ரல் 3

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 165 ஆவது ஜன்ம தினத்தை முன்னிட்டு கடந்த 10 ஆம் திகதி உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திற்கு ஆச்சிரமத்தின் செயலாளர் சுவாமி சித்ருபானந்தா பல நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

(ஐ-30)

## கல்விச்சேவை

யாழ்ப்பாணம். ஏப்ரல் 3

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா பிரகடனப்படுத்திய பிரேமைஆண்டில், ஊரெழு சாயி மண்டலியின் இளைஞர் பிரிவினர்' பிரேமவித்தியாலயம்' எனும் கல்விச் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

2 ஆம் தரம் தொடக்கம் 4 ஆம் தரம் வரை கல்வி கற்கும் பின்தங்கிய மாணவர்களுக்கு கல்வி அறிவையும் மனிதவிழுமியங்களையும் பற்றி இச்சேவையில் கற்பிக்கப்படும். (ஐ-15)

## பெண்களுக்கு உதவி

காணாமற் போனோர் கைதுசெய்யப்பட்டோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த — கணவனின் துணையை இழந்த — பெண்களில் பத்துப் பேருக்கு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் உதவ முன்வந்துள்ளது

இந்த உதவிகளைப் பெற விரும்பும் பாதிக்கப்பட்ட பெண்கள் மேற்படி சங்கத்தின் தலைவர் வி. செல்வராசாவுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## மழையால் விவசாயிகள் நன்மை

சாவகச்சேரி, ஏப்ரல் 3

தென்மராட்சிப்பிரதேசத்தில் பரவலாக நேற்று முன்தினம் பிற்பகல் பலத்த மழை பெய்தது. இம்மழையால் சிறுதானியப் பயிர்ச் செய்கையாளர்கள் நன்மையடைவர் என விவசாயிகள் தெரிவித்தனர்.

(ஐ-31)

## அறநெறிப் பாடசாலை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில் கல்லூரி வீதி, நீராவியடியிலுள்ள சபையின் நாவலர் ஆச்சிர மண்டபத்தில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் 11மணி வரை அறநெறிப் பாடசாலை பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது.

இவ்வகுப்பில் பங்கு பற்றிப் பயன் பெற விரும்பும் மாணவர்கள் நேரில் சமுகம் தந்து பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-30]

## சமய அறிவுப் போட்டிப் பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு வாலைஅம்மன் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில்வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 11மணிக்கு மேற்படி ஆலயத்தில் வைத்து வழங்கப்படும்.

[க]

## மக்களுக்கு உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் சென்.மேரிஸ் தேவாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களுக்கு யாழ். மாவட்ட புளொட் அமைப்பினர் நேற்று முன் தினம் பாய்கள், சவர்க்கார வகைகள் மற்றும் தேநீர் தயாரிக்கும் பாத்திரங்கள் ஆகியனவற்றை வழங்கினர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் தலைவர் அன்ரன் பொன்னையா, புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பெனடிக்ற் தனபாலசிங்கம், மாவட்ட அமைப்பாளர் கே. ரஞ்சன் ஆகியோர் கொண்ட குழுவினரே நேரில் அங்கு சென்று மேற்படி பொருள்களை வழங்கினர்.

(ஐ-10-173)

## கசிப்பு விற்பனை அதிகரிப்பு

கொழும்புத்துறை,ஏப்ரல்3

ஈச்சமோட்டை ஜே/ 66 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் தற்போது சட்டவிரோதமாகக் கசிப்பு, கள் என்பவற்றின் விற்பனை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[ஐ-30]

## நிவாரணம் விநியோகம்

அரியாலை, ஏப்ரல் 3

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்தோருக்கான 85 ஆவது 'ஏ' 'பி' உலர் உணவு முத்திரைப் புள்ளிகளுக்கு நிவாரணப் பொருள்களை விநியோகித்து வருகின்றது.

(க-17)

## கிணறு அமைப்பு

அரியாலை, ஏப்ரல் 3

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் நீர் வசதி கருதி பின்புற வளவில் கிணறு ஒன்றை அமைத்து வருகின்றது.

[ஐ-17]

## சம்பளக் கொடுப்பனவு

தென்மராட்சி, ஏப்ரல் 3

கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கத்தில் பணிபுரியும் அங்கத்தவர்களுக்கு 1999 ஆம் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படாதிருந்த வேதனத்தின் இறுதிக் கட்டக் கொடுப்பனவுகள் கடந்த மார்ச் மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே நிலுவைத்தொகை இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

[க-117]

## திருத்தப்படாத ஒழுங்கை

கொழும்புத்துறை,ஏப்ரல் 3

நல்லூர் கொண்டலடி ஒழுங்கை நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த ஒழுங்கையைத் திருத்துமாறு இப்பகுதிப் பொது அமைப்புகள் நல்லூர்ப் பிரதேச சபையைக் கேட்டுள்ளன. [க-30]

## 1971 - 76 பட்டதாரிகள் நியமனம்

# பாரபட்சம் காட்டப்பட்டோருக்கு சம்பள உயர்வு வழங்க இணக்கம்

அரியாலை, ஏப். 3

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வேதன உயர்வை அவர்களோடு நியமனம் பெற்ற ஏனையவர்களுக்கும் வழங்குவதற்கு பொது நிர்வாக அமைச்சின் மேலதிக செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1971 ஆம் ஆண்டுக்கும் 1976 ஆம் ஆண்டுக்கும் இடையில் நியமனம் பெற்ற அரச ஊழியர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் பாரபட்சமாக நடத்தப்பட்டனர். ஒரு பகுதியினர் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்களாக உயர்ந்த வேதனத்துடன் பதவி உயர்த்தப்பட்டு அகில இலங்கை சேவைக்கும் உள்வீர்க்கப்பட்டார்கள்.

இந்த பாரபட்சத்துக்கு எதிராக பட்டதாரி பயிற்சித் திட்டத்தின் கீழ் 1971 ஆம் ஆண்டுக்கும் 1976 ஆம் ஆண்டுக்கும் இடையில் நியமனம் பெற்ற அரச அலுவலர் சங்கம் உயர்நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை அண்மையில் தாக்கல் செய்தது.

இந்த வழக்கை ஏற்றுக் கொண்ட நீதியரசர் இது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டுஅறிக்கை சமர்ப்பிக்கும்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரைப் பணித்திருந்தார்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னிலையில்இடம் பெற்ற இந்த விசாரணைக்குப் பொது நிர்வாக அமைச்சின் மேலதிக செயலர் சமுகமளித்தார். உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வேதன உயர்வை ஏனையவர்களுக்கும் வழங்குவதற்கு அவர் அங்கு இணக்கம் தெரிவித்தார்.

இதற்கான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது.

1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## கூரையில் ஏறியவர் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 3

பழைய வீடொன்றின் ஓடுகளைக் கழற்றுவதற்காக கூரையில் ஏறியவர் தவறி விழுந்து காயமடைந்தார்.

கல்வியங்காடு, கட்டைப் பிராயில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் கந்தையா செல்வரத்தினம் (வயது 33) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (இ-15)


## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

# சகல வர்த்தகர்களுக்குமான அறிவித்தல்

2000 ஏப்ரல் மாத கடைசி வாரத்தில் யாழ். வணிகர் கழகம் வாடகைக்கு அமர்த்தவுள்ள கப்பல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 04-04-2000 செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணிக்கு (புதிய நேரம்) யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறும் கப்பலில் பொருள்கள் ஏற்றும் வர்த்தகர்கள் யாவரும் பங்குபற்றும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
இல 27, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம் (சி/11616)


# ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 28 - 12 - 1919



மறைவு 16 - 03 - 1999

## அமரர் கதிரேசு சதாசிவம்

(ஓய்வுபெற்ற பாடசாலை கட்டட பரிசோதகர்)

திதி: 03-04-2000

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஊருக்கு உத்தமனாய்
உறவினர்க்கு உறுதுணையாய்—இருந்து
விண்ணுலகை நீயடைந்து
ஓராண்டு சென்றதின்று
துயரென்றும் சாகரத்தில்
துவள்கின்ற எங்களுக்கு—உன்
நினைவுகளே ஒளியாகும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்பு மனைவி, மகன், மகள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
மைத்துனர்.

23, சங்கரப்பிள்ளை றோட்,
மானிப்பாய் (74928)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

பின்வரும் கற்கை நெறிகளுக்குத்தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி 2000 / 2001

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறியில் சித்தியடைந்தவர்கள் மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இக்கற்கை நெறிக்கு மாணவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி:
12 — 05 — 2000

### 2. தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி: 2000 / 2001

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையுடன் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபன/தனியார் நிறுவனங்களின் அல்லது ஐந்து வருடங்களுக்கு குறையாத வேலை அனுபவமும் ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபன/தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழிலில் (விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்-

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி
12 — 05 — 2000

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பாடநெறியில் பங்கு பற்றுவோர், எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வு மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு:- 10 வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விவரங்களையும் பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை நேரில் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து அல்லது பல்கலைக் கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 50க்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ. 10 செ. மீ. அளவினதான கடித மேலுறையுடன் உதவிப் பதிவாளர்/தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி. என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்
(சி/11615)

# கசிப்பு விற்ற ஐவருக்கு நீதிமன்றில் அபராதம்

வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோதமான வகையில் கசிப்பு, கள் விற்பனையில் ஈடுபட்ட ஐவரை 6 ஆயிரத்து 500 ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித் துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை மதுவரி இலாகா உத்தியோகத்தர்களினால் கைது செய்யப்பட்ட இவர்கள் அண்மையில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வதிரி தேவரையாளியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை—புஷ்பராசா என்பவர் 500 மில்லி லீற்றர் கள் வைத்திருந்தமைக்கு ஆயிரத்து 500 ரூபாவும்—கம்பர்மலையைச்சேர்ந்த வைத்திலிங்கம் — பூமணி என்பவர் 3000 மில்லி லீற்றர் கள் வைத்திருந்தமைக்கு ஆயிரம் ரூபாவும்—

உச்சில், கரவெட்டி தெற்கில் 375 மில்லி லீற்றர் அரச சாராயம் வைத்திருந்த கணபதி — தியாகராசாவுக்கு ஆயிரம் ரூபாவும்—

ஆலங்கட்டை, அல்வாய் வடக்கில் 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த இராஜேந்திரம் — ஜெயனேஸ்வரனுக்கு 2 ஆயிரம் ரூபாவும்—

புலோலி கிழக்கு, சந்தா தோட்டம் என்ற இடத்தில், தலையணையின் கீழ் 375 மில்லி லீற்றர் கசிப்பு பதுக்கி வைத்திருந்த பொன்னன் — இரத்தினம் என்பவருக்கு ஆயிரம் ரூபாவும்.

அபராதமாக விதிக்கப்பட்டது. (ஐ-109)


(காரைநகர் - மணற்காடு)

# அருள்மிகு அன்னை கும்பநாயகி முத்துமாரி அம்பாள் தேர் உற்சவ சிறப்பம்சம்



ஆற்றமுடியா பேதமைகள் உந்தன்
அடியவரில் அகல வேண்டுமம்மா
மாற்றமொன்று நிகழ்ந்தே உந்தன்
மண்ணில் வாழ வேண்டுமம்மா
ஏற்கமுடியா கொடுமையினை உந்தன்
எழிலகத்தில் நீக்கிவிட வேண்டுமம்மா
வேற்றுமைகள் விலகிடவே உந்தன்
விஞ்சும் அருள் பெருகிவிட வேண்டுமம்மா

தீர்வு தந்தெமைக்காக்க உந்தன்
தேரிலேறி வருவாயம்மா
சேர்ந்து நாங்கள் உனைத் தொழவே
சேதி கொண்டு வருவாயம்மா
நேர்ந்து உன்னை வாழ்கின்றோம்
நீண்ட வேண்டுதலை ஏற்பாயம்மா
காத்து எம்மை வாழவைத்தே
காவல்செய்து இருப்பாயம்மா.

இன்று தேரேறிவரும் கும்பநாயகி முத்துமாரி புத்தாயிரம் ஆண்டில் எல்லா மக்களும் நலமுடன் வாழவேண்டி தேர் உற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்:

| மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் | மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் |
|---|---|
| இல. 212, ஸ்ரான்லி, வீதி, 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2024, 2660 | இல. 180, மத்திய வீதி, கொழும்பு - 12 தொ. பே. 01-347210 |

சகோதர நிறுவனம்

ஈஸ்வரன் றேடர்ஸ்
இல. 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலை பேசி இல. 0212813

(சி/11613)

# அமெரிக்காவின் புதிய கொள்கை இந்தியாவுக்கே சாதகமானது

## காஷ்மீர் தீவிரவாதத் தலைவர் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஏப்ரல் 3
தெற்காசியா தொடர்பாக அமெரிக்க அரசு தற்போது கடைப்பிடித்துவரும் புதிய கொள்கை இந்திய அரசாங்கத்துக்கே சாதமாக உள்ளது.

ஜம்மு—காஷ்மீர் தீவிரவாதத் தலைவர் அமானுல்லா கான் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் கிளின்ரனின் இந்திய விஜயத்தின் விளைவுகள் குறித்துக் கருத்துத் தெரிவித்த போது அவர் இதனைக் கூறினார்.

கிளின்ரன் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சமயம் காஷ்மீர் பகுதியில் எமது போராளிகளுக்கு எதிராக இந்தியா விமானத் தாக்குதல்களை முதன் முதலில் நடத்தியது. இதுவே கிளின்ரனின் [illegible] னால் எமக்கு ஏற்பட்ட முடிவு.

கடந்த 12 ஆண்டுகளில் இந்திய விமானப்படை ஹெலிகள் எமது போராளிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன. இதற்குக் காரணம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினை குறித்து கிளின்ரன் தெரிவித்த கருத்துகளே ஆகும்.

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து கிளின்ரன் மௌனம் சாதித்தார். இதனால் காஷ்மீர் மக்கள் தமது சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு அமானுல்லா கான் மேலும் தெரிவித்தார்.

---

# புகைபிடிப்போரில் வருடாந்தம் ஒரு கோடி பேர் உயிரிழப்பர்!

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

நியூயோர்க், ஏப்ரல் 3
உலகில் புகைபிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகி ஆண்டு தோறும் உயிரிழப்போரின் எண்ணிக்கை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு ஒரு கோடியை எட்டிவிடும் என்று உலக சுகாதார நிறுவனம் அச்சம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழப்பவர்களில் சுமார் 70 லட்சம் பேர் அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்றும் அது தெரிவித்துள்ளது.

புகைப்பழக்கத்துக்கு எதிரான அமைப்புகளின் கூட்டத்தில் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றிலேயே உலக சுகாதார நிறுவனம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

புகைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களில் அதிகமானோர் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் என்று ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த நிலை தொடருகின்றது. பிரேஸில், இந்தியா, சீனா, தென்ஆபிரிக்கா, ஸிம்பாப்வே, ஓமான், எகிப்து ஆகிய நாடுகளில் சிறுவர்களும், இளைஞர்களும் தினமும் புகைப்பிடித்து வருகின்றனர். எனினும் அந்த நாட்டு அரசாங்கங்கள் இந்த விடயத்தில் போதிய கவனம் செலுத்தாமல் உதாசீனம் செய்து வருகின்றன. இதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவை.

இவ்வாறு உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.
[ஐ-6-ரி]

---

# 50 ஆயிரம் பெண்கள், சிறுவர்கள் அடிமைகளாக அமெரிக்காவுக்கு!

## ஆண்டுதோறும் கடத்தப்படுகின்றனர்

நியூயோர்க், ஏப்ரல் 3
ஆசிய மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து ஆண்டு தோறும் 50 ஆயிரம் பெண்களும் சிறுவர்களும் அமெரிக்காவுக்குள் ஏமாற்றி அழைத்து வரப்படுவதாக அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ தெரிவித்துள்ளது.

ஏதுமறியாத அப்பாவிகளான இவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைந்ததும் பாலியல் தொழிலாளர்களாகவும் வீட்டுப் பணியாளர்களாகவும் கூலித் தொழிலாளர்களாகவும் பணிபுரிய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்றும் அந்த அமைப்பு மேலும் கூறியுள்ளது.

இதே வேளை —

ஆசியர்கள், லத்தீன் அமெரிக்கர்கள், கிழக்கு ஐரோப்பியர்கள் ஆகியோர் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பான அறிக்கை முழுமையாகப் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்று அமெரிக்காவில் இருந்துவெளிவரும் 'நியூயோர்க் ரைம்ஸ்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு சர்வதேச ரீதியில் பெண்கள் கடத்தப்படுகிறார்கள். இது சமகால அடிமைத் தனத்தின் வெளிப்பாடு என்று அமெரிக்காவுக்கு கடத்தப்படுவோர் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் ஒரு லட்சம் பெண்களும் சிறுவர்களும் அமெரிக்காவுக்கு வந்து அடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ 6 - ரி)

---

## கராச்சியில் காவலரண்மீது தாக்குதல்

இஸ்லாமாபாத், ஏப்ரல் 3
பாகிஸ்தானின் கராச்சியில் பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் மூன்று பொலீஸார் உயிரிழந்தனர்.

**உலக அரங்கில்**

கராச்சியில் கடந்த நவம்பர் மாதம் முதல் நடைபெற்று வரும் இவ்வாறான தாக்குதல்களில் இதுவரை 14 பொலீஸார் உயிரிழந்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.
(ஐ-6-5)

---

### பாதுகாப்புச் சபை உறுப்புரிமை

# இந்தியக் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்தது

வாஷிங்ரன், ஏப்ரல் 3
ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெறுவதற்கு உதவுமாறு இந்தியா விடுத்த கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

இந்திய உப கண்டத்தில் தனக்குள்ள முக்கியத்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெற இந்தியா முயன்று வருகின்றது.

அண்மையில் 5 நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா வந்திருந்த அமெரிக்க அதிபர் கிளின்ரனிடம் இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும்வகையில் அமெரிக்காவின் சர்வதேச விவகாரத்துறை இணை அமைச்சர் சி. டேவிட் வாஷிங்ரனில் கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவின் கோரிக்கையை நிராகரித்தார்.

''ஐ. நா. பாதுகாப்புச் சபையில் புதிய நிரந்தர உறுப்பு நாடுகளாக இணைவதற்கு ஜேர்மனியையும் ஜப்பானையும் அமெரிக்கா ஆதரிக்கும். பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை 15 இல் இருந்து 21 ஆக உயர்த்துவதற்கும் அமெரிக்கா யோசனை தெரிவித்துள்ளது.

ஏனைய பிரதான பிராந்திய தொகுதிகளுக்கு ஒவ்வொரு நிரந்தர இடம் இருக்கவேண்டும். அந்தத் தொகுதிகளில் தமக்குள் யார் இருக்க வேண்டும் என்பதை அவைதான் தீர்மானிக்க வேண்டும்'' என்றும் அவர் மேலும் சொன்னார்.
(ஐ-6-ரி)

### எகிப்து உதவும்

இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையைப் போக்க எகிப்து முன்வந்துள்ளது.

அமெரிக்கா சென்று அதிபர் கிளின்ரனைச் சந்தித்துப் பேசிய பின்னர் நாடு திரும்பிய எகிப்திய அதிபர் கொஸ்னி முபாரக் இதனைக் கூறினார். [ஐ-6-ரி]

---

# பாலியல் வல்லுறவு தொடர்பாக இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

புதுடில்லி, ஏப்ரல் 3
பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு பெண்ணின் உடலில் காயங்கள் இல்லை என்பதற்காக குற்றச்சாட்டு பொய்யானது என்று நிரூபிக்கவோ அல்லது அது அவரது சம்மதத்துடன் நடைபெற்ற செயல் என்று கூறுவதற்கு அதை ஒரு ஆதாரமாகப் பயன் படுத்தவோ கூடாதுஎன இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இராஜஸ்தான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்றைத் தள்ளுபடி செய்து வழங்கிய தீர்ப்பிலேயே உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இதனைத் தெரிவித்தனர்.

தொடர்பில்லாத மற்றும் முக்கியத்துவமில்லாத சூழ்நிலைகளுக்கு மதிப்பளித்து குற்றம் சாட்டப்பட்டவரை நீதிமன்றங்கள் விடுதலை செய்யக்கூடாது.

மகளிர் மீது இடம்பெறும் பாலியல் ரீதியான குற்றச் செயல்களை விசாரணை செய்யும் போதும் நீதிமன்றங்கள் பெரிதும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் நீதிபதிகள் தமது தீர்ப்பில் மேலும் தெரிவித்துள்ளனர். [ஐ 6]

---

# சோனியாவின் செல்வாக்கு கட்சிக்குள் திடீரெனச் சரிகிறது!

புதுடில்லி, ஏப்ரல் 3
இந்தியாவில் எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்திக்கு கட்சிக்குள் இருந்துவந்த செல்வாக்குத் திடீரெனச் சரிந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய நாடாளுமன்றத்தின் மேலவைக்கான காங்கிரஸ் உறுப்பினர்களைத் தெரிந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட தேர்தலில் போட்டியிட்ட சோனியாவின் ஆதரவு பெற்ற மூவரில் இருவர் தோல்வி அடைந்துள்ளனர்.

இந்தத் தோல்வி கட்சித் தலைமையில் சோனியாவுக்குப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதையே காட்டுவதாக இநதியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலவை உறுப்பினர் தேர்தலில் சோனியாவின் ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டதற்கு மேற்கு வங்கம், ஒரிஸா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த கட்சிப் பிரதிநிதிகளே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. சோனியா மீதான வெறுப்புக் காரணமாகவே அவர்கள் எதிர்த்து வாக்களித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

இவர்களின் இந்தச் செயலை இந்தியப் பத்திரிகைகள் சில மாநிலக் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் சோனியா தலையில் மிளகாய் அரைத்துவிட்டதாக வர்ணித்துள்ளன.

அதேசமயம்—

முன்னாள் மத்திய அமைச்சரும் கட்சியின் மூத்த உறுப்பினருமான மாக்கிரெட் அல்வா '' காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி வாக்களித்திருப்பது உண்மைதான். ஆனால் இது சோனியாவின் தலைமைக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை'' என்று கூறினார்.

இதனிடையே மேற்கு வங்க மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் நாடாளுமன்ற மேலவைத் தேர்தலில் எதிராக வாக்களித்தது குறித்து ஆராய்வதற்காக மேற்கு வங்க மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இருவரைச் சோனியா உடனடியாகப் புதுடில்லிக்கு அழைத்துள்ளார்.
(ஐ-6-ரி)

---

### செச்சினிய யுத்தத்தின் போது

# ரஷ்யப்படை புரிந்த மீறல்கள் விசாரிக்கப்பட வேண்டும்

## ஐ.நா. மனித உரிமைஅதிகாரி கூறுகிறார்

குறோஸ்னி, ஏப்ரல் 3
செச்சினியாவில் ரஷ்யப் படைகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி மேரி ரொபின்சன் கோரி உள்ளார்.

செச்சினியாவில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக தலைநகர் குறோஸ்னிக்கு விஜயம் செய்த அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: —

ரஷ்யப் படைகள் செச்சினியாவில் பாரிய மனித உரிமை மீறல் குற்றங்களில் ஈடுபட்டமைக்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. செச்சினியத் தீவிர வாதிகளும் பொது மக்கள் மீது வன்முறைகளைப் பிரயோகித்துள்ளனர்.

ஆனால் ரஷ்யப்படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் அளவுக்கதிகமானவை; கொடுமையானவை. எனவே ரஷ்யப் படைகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு ரஷ்யாவின் புதிய அரசு முன்வர வேண்டும் என்று தெரிவித்தார்.

அகதி முகாம்களில் உள்ள செச்சினிய அகதிகளின் நிலைமை மற்றும் எதிர்காலம் குறித்தும் அவர் ஆழ்ந்த கவலையை வெளியிட்டார். (ஐ-6-ரி)

# வளம் கொழித்த தீவகக் கிராமங்கள்

# பொலிவிழந்து வாடிய நிலையில்

வேலணை கிழக்குப்பகுதியில் வளம் நிறைந்த கிராமங்களான மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு என்பன இப்போது எழிலும் வளமும் யுத்தம் காரணமாகச் சிதைந்துவிட வளங்களையும் வாழ்ந்த மக்களையும் இழந்த சோகத்தில் தாடி வளர்க்கும் மாந்தரைப் போன்று காடு வளரக் காட்சியளிக்கின்றன.

முன்னர் சுமார் ஏழாயிரத்துக்கும் அதிகமான மக்களைக் குடிச்செறிவாகக் கொண்டு காணப்பட்ட இக்கிராமங்களில் இன்று ஆயிரத்து 156 பேரே உள்ளனர். மண்கும்பானில் 58 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேரும் அல்லைப்பிட்டியில் 200 குடும்பங்களைச் சேர்ந்த 750 பேரும் மண்டைதீவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 224 பேரும் உள்ளதாகக் கிராமஅலுவலர்கள் கூறுகின்றனர்.

இக்கிராமங்களில் போருக்குமுன் விவசாயம் உச்ச நிலையில் இருந்தது. பார்க்கும் இடமெல்லாம் பசுமை செழித்துக் குலுங்க நெல், புகையிலை, தோட்டப்பயிர்களென்று காட்சியளித்தன. இன்றுவிவசாயிகளும் இல்லை; விவசாயமும் இல்லை என்றாகிவிட்டதாகக் கூறுகிறார் சிவலோகநாதன். நீர்வளம், நிலவளம், கலைவளமென்று மக்களுக்குக் கைகொடுத்த வளங்களை ஒருகணம் நினைவு கூர்ந்தனர் அல்லைப்பிட்டி, மண்டைதீவுக் கிராம அலுவலர்கள் இரத்தினேஸ்வரன், மரியதாஸ் ஆகியோர்.

கடந்த ஆண்டிலும் இங்கு வாழும் மக்களில் சிலர் நெல் மற்றும் தோட்டச் செய்கைகளில் ஈடுபட்டிருந்த பொழுதும் அவற்றால் போதிய பயன் கிட்டவில்லை எனவும் அடிக்கடி பெய்த மழையும் சைபீரியத் தாராக்களின் வரவும் நெற்பயிர்கள் சேதமடையக் காரணமாகிவிட்டதாகவும் கூறப்பட்டது.

புகையிலை மிகச் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டது. அல்லைப்பிட்டி மண்கும்பான் பகுதிகளில் தேங்காய், பனங்கிழங்கு உற்பத்தி இம்முறை கணிசமாகக் காணப்பட்டது. பனை, தென்னைகள் நிறைய வெட்டிச் சாய்க்கப்பட்டதில் பொதுவாக எல்லோருக்குமே கவலை. மண்டைதீவில் மீளக்குடியமர்ந்த பின்னர் மட்டும் சுமார் 3 ஆயிரத்து 500 பனைகள் வெட்டிச் சரிக்கப்பட்டு விட்டதாக அவ்வூர்வாசி ஒருவர் தெரிவித்தார். தீவுப்பகுதியில் பெருந்தொகையான பனை, தென்னைகள் காப்பரண்களாகக் கிடப்பதைக் காணலாம்.

மண்டைதீவுப் புகையிலை நாற்றுக்கு யாழ். குடாநாட்டு விவசாயிகளிடையே காலங்காலமாக மவுசு இருந்து வந்துள்ளது அங்கு சென்று தமக்கு வேண்டிய நாற்றுக்களைப் பெற்றுத் திரும்புவது சகஜம். இன்றோ வெளியிடங்களில் உள்ளவர்கள் மட்டுமல்ல மண்டைதீவில் பிறந்து வளர்ந்து நீண்டகாலமாக வேறு இடங்களில் வதியும் மண்டைதீவு மக்கள் கூட அங்கே செல்வது கடினம்.

தீவுப் பகுதிகளிலும் சரி ஏனைய வேறு இடங்களிலும் சரி இன்று விவசாயிகள் மிகவும் சொற்ப எண்ணிக்கையிலேயே உள்ளதால் 'நாமாக எமது புகையிலை நாற்றுக்களை விற்பனைக்காக வேறு இடங்களுக்குக் கொண்டு சென்றாலும் வாங்குவாரில்லை'' என்கிறார் மண்டைதீவைச் சேர்ந்த விவசாயி ஒருவர். மண்டைதீவில் இம்முறை புகையிலை 40 பரப்பிலும், மிளகாய் 22 பரப்பிலும் வெங்காயம் 5 பரப்பிலும் மட்டுமே செய்கை பண்ணப்பட்டது மண்கும்பான், அல்லைப்பிட்டிப் பகுதிகளில் நூறு பத்து ஏக்கர் நிலங்களிலேயே விவசாயப் பயன்பாடுகள் இடம்பெற்றன.

தண்ணீர்ப் பிரச்சினை என்றில்லை. குளங்கள் தாராளமாக உண்டு. விவசாயத்திற்கென அவற்றைப் பயன்படுத்துவதில்லை. கிணறுகளில் இருந்தே பயிர்களுக்கு நீர் இறைக்கப்படுகின்றது. மண்டைதீவில் ஐ. நா. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நான்கு குடிதண்ணீர்க் கிணறுகளை அமைத்துள்ளது.

### கல்வி நிலை

கல்வி நிலைமை பின்னடைந்தே உள்ளது. பாடசாலைக் கட்டடங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் எண்ணிக்கை குறைவு. மண்கும்பானில் சுமார் 35 மாணவர்களும் அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்களும் மண்டைதீவில் 26 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் அல்லைப்பிட்டியில் 226 பிள்ளைகளும்14 ஆசிரியர்களும் உள்ளனர். அல்லைப்பிட்டியில் கல்வி ஓரளவுநன்றாகவேஇருக்கிறது

## உள்ளூர் வலம்

என்கிறார் கிராம அலுவலர் இரத்தினேஸ்வரன். மண்டைதீவு மகாவித்தியாலயத்திற்குப் பிரதான வீதியைப் பயன்படுத்த முடியாது. வயல் வெளிகள் ஊடாகவேசெல்ல வேண்டும்.

### மீனவரின் எண்ணிக்கை குறைவு

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் மீன்பிடித் தொழிலாளர்கள் மிகவும் குறைவு. "அநேகமான மீனவர்கள் வேலணைத்துறைக்குச் சென்று விட்டனர். இந்த இரு கிராமங்களிலும் மீன் நிறுத்து விற்பனை செய்யப்படுவதில்லை. ஒரு 50 ரூபா கொடுத்தால் வஞ்சகமில்லாமல் போட்டுத் தருவார்கள் என்று பலர் கூறினார்கள். மண்டைதீவில் இனியன்திடல் பகுதியில் வசித்த மீனவக் குடும்பங்கள் தற்போது புனித பேதுருவானவர்தேவாலயப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். போதிய அளவு மீன்பிடிக்கப்படுவதுடன் அவை விற்பனைக்காக யாழ். நகருக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இக்கிராமங்களில் உள்ள வீடுகள் பெரும்பாலானவை சேதமடைந்துள்ளன. மண்டைதீவில் வீட்டுக் கூரைகள் கழற்றப்பட்டு அவை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கே அமைக்கப்பட்டிருந்த இலங்கை வானொலியின் உப அஞ்சல் நிலையம் தரைமட்டமாகக் கிடக்கிறது. மண்கும்பான் கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டடம் மீளப்புனரமைக்கப்பட்டுப் பொலிவுடன் விளங்குகிறது. இருபத்தைந்து வீடுகள் அமைக்கும் திட்டத்தில் இப்போது 16 வீடுகளுக்கான அத்திவாரமிடப்பட்டுள்ளது.

### ஆலயங்களின் நிலை

இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் உண்டு. எனினும் பூசைகள் இடம்பெறுவது குறைவே. மண்கும்பான் வெள்ளைப் புற்றடி விநாயகர் ஆலயம் பிரசித்தி பெற்றது. சித்திரைப் புத்தாண்டுக்குத் தேரோடும் இந்த ஆலயத்தின் தேர் வெயில், மழையில் தோய்ந்தபடி கவனிப்பாரின்றிக் கிடக்கிறது.

மண்கும்பானில் உள்ள புதிய பழைய பள்ளிவாசல்கள் பராமரிக்கப்படுகின்றன. குருபாபா பள்ளிவாசல் உட்பட இரண்டுக்கும் வெளிச்சம் ஏற்றுவது இந்துக்களே. அல்லைப்பிட்டியில் இரண்டு கோயில்களில் பூசைகள் இடம்பெறுகின்றன.

நோயாளர்களைப் பொறுத்தவரை கஷ்டம் தான். யாழ்ப்பாணம் அல்லது வேலணை, ஊர்காவற்றுறைக்குச் செல்ல வேண்டும் போக்குவரத்து வசதிகள் கிடையாது. மண்டைதீவு நோயாளர்களுக்குக் கால்களே துணை. பண்ணைப் பாலம் வரை நடந்து பஸ் பிடிக்க வேண்டும்.

இக்கிராமங்களின் தரைத்தன்மை பொதுவாக மணற்பாங்கானது. மண்கும்பானில் தமது கட்டடத் தேவைகளுக்காகப் பிறபகுதிகளில் இருந்து வந்துமண் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. கடற்கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் வரையான தூரத்திற்குள் மண், கல், சிற்பி என்பன அகழக்கூடாதுஎன இலங்கைக் குடியரசின் சட்டவிதி இங்கே அமுல்படுத்தப்படுவதில்லை என முறையிடுகின்றனர் பொதுமக்கள். மணல் ஏற்றுவதால் தமது கிராமம் பாதிக்கப்படுகிறது என்பது அவர்களது கவலை.

வர்த்தக தாபனங்கள் என்று பெரிதாக ஒன்றும் இல்லை.

யுத்தம் மக்களைப் பெரிதும் கஷ்டத்தில் ஆழ்த்தி பொருளாதார வளங்களையும் சிதறடித்து விட்டது என்கிறார் மண்கும்பான் சமுர்த்தி உத்தியோகத்தர் உமாதேவி. எல்லாமே சூனியமாகி விட்டது. என்பவர் அல்லைப்பிட்டி சமுர்த்தி உத்தியோகத்தர் எட்லிகா. தற்சமயம் தமது பிரிவுகளில் உள்ள குடும்பவிவரங்களைச் சேகரித்து வருவதாக அவர்கள் கூறினர்.

### பஸ் சேவை

அல்லைப்பிட்டி, மண்டைதீவுகளுக்கு பஸ் சேவை கிடையாது. ஏற்கனவே வருமானம் இன்றி அவை நிறுத்தப்பட்டு விட்டன. மண்கும்பானுக்கு காலை மாலை ஒரு சேவை உண்டு.

மண்டைதீவில் மக்கள் மீளக்குடியமரவில்லை. அங்கு நிலைமைகள் மிகவும் பரிதாபகரமானது எனக் கூறும் வேலணை பிரதேச செயலர் இரத்தினம் அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் சில அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இப்பகுதிகளிலும் மக்கள் தொகை மிகவும் குறைவு என்கிறார்.

நெடுந்தீவு

**லக்ஷ்மன்**

தொண்டர் நிறுவனங்களோ அல்லது அரச உதவிகளோ பெரிய அளவில் கிடைக்கவில்லை என்பதும் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று சிறுதொழில் பயிற்சிகள் இங்குள்ள இளைஞர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

போரும் அழிவுகளும் மனித வாழ்வியலோடு இணைந்துவிட்ட ஒன்றுதான் பண்டைக் காலத்தில் இடம்பெற்ற போர்கள் பெரும்பாலும் ஒரு சில நாள்களில் முடிந்து விடுவதுண்டு. காலவரையின்றி நீளும் இப்போரால் ஓர் இனம் அழிந்துகொண்டுபோக எமது பிரதேசங்களோ ''ஆண்டாண்டும்போய் மடமும் குலைந்த நிலையில்...'' ★

## உயிரிழந்த மேலும் சிலர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

'ஓயாத அலைகள் — 3' நடவடிக்கையின் போது உயிரிழந்துள்ள மேலும் 12 பேரின் விவரங்கள் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் விவரம் வருமாறு:-

★ இனியவன் அல்லது தமிழ்ப்புலி (பஞ்சாட்சரம் — செல்வகுமார், மன்னார்).

★ முகுந்தன் (செபமாலை செல்வம் — யாழ்ப்பாணம்).

★ நிலாணி (விவேகானந்தம் — சந்திரகுமாரி, புதுக்குடியிருப்பு).

★ வடிவராஜ் (மாணிக்கப்போடி — தெங்காதரன், மட்டக்களப்பு).

★ கதிரொளி (சின்னத்தம்பி — தர்சினி, யாழ்ப்பாணம்).

★ தமிழ் முரசு [பன்னீர்ச்செல்வம் — சங்கீத்தா, யாழ்ப்பாணம்].

★ நர்மா [மரியதாஸ் — குகதாஸ், யாழ்ப்பாணம்].

★ தயானந்தன் அல்லது நிவேதன் [துரைராஜா — சுரேந்திரன், மட்டக்களப்பு].

★ அன்புமணி [கனகரத்தினம் — சத்தியசீலன், யாழ்ப்பாணம்].

★ கௌசிகன் [ஆறுமுகம் — சதீஸ்குமார், அக்கராயன்].

★ றொபின்சன் பாலசிங்கம் — பிரபாகரன், யாழ்ப்பாணம்].

★ பரணிதாஸ் அல்லது பரணி [நாகராசா — சிவராசா, மன்னார்].

(முன்னர் வெளியான பெயர் விவரங்கள் 9 ஆம் பக்கத்தில்)

(இ-5)

## தென்மராட்சியில் மழையால் இடம்பெயர்ந்தோர் அவதி

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00மணிக்குத் தென்மராட்சிப் பகுதியில் பெருமழை பெய்தது. பளைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் கட்டடங்களிலும் மரங்களின் கீழும் தங்கியிருந்த மக்கள் இதனால் பெருங்கஷ்டங்களை அனுபவித்தனர்.

எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து நடந்து வந்தவர்களும் மழையில் நனைந்தபடி வீதிகளில் சென்றதைக் காணமுடிந்தது. (ஐ-2]7-3]7)

## 5 மாதங்களுக்கு முன்பு புதைக்கப்பட்ட சடலம் தோண்டி எடுக்கப்பட்டது!

### அதன் சில பகுதிகள் மேலதிக ஆய்வுக்காக கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

புற்றளை ஆலயக் கிணற்றில் இருந்து 5 மாதங்களுக்கு முன் சடலமாக மீட்கப்பட்டு ஆனைவிழுந்தான் மயானத்தில் புதைக்கப்பட்ட புலோலி தெற்கைச் சேர்ந்த, கணபதிப்பிள்ளை பத்மநாதன் (வயது 22) என்பவரின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது. பரிசோதனைக்கு வேண்டிய சில பாகங்கள் மாத்திரம் சடலத்திலிருந்து எடுக்கப்பட்டு சடலம் மீண்டும் அதே இடத்தில் புதைக்கப்பட்டது.

இதற்கென யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து அழைக்கப்பட்ட சட்ட வைத்திய அதிகாரி குழுவினர், பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஜீ. ஏகநாதன் முன்னிலையில் சடலத்தை புதை குழியில் இருந்து மீட்டனர். மீட்கப்பட்ட சடலம் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் வி. ஸ்ரீஇராஜேஸ்வரன் நீதிவானின் உத்தரவின் பேரில் கொழும்புக்கு மேலதிக பரிசோதனைக்காக அனுப்பவேண்டிய சடலத்தின் மிக முக்கியபாகங்களைச் சேகரித்தார்.

சேகரிக்கப்பட்ட பாகங்கள் கொழும்புக்கு அனுப்பும் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. (இ-15)

## அரச ஊழியர்களுக்கான கணனிப் பயிற்சி ஆரம்பம்

யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவப் பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ள கணனிப் பயிற்சி வகுப்புகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

அரச திணைக்களங்களில் இருந்து இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட 20 பேர் கொண்ட முதற் குழுவுக்கே இன்று காலை 9 மணிக்கு 772, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தை, நல்லூரில் அமைந்துள்ள டீ. சீ. எஸ். கணனி நிறுவனத்தின் கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களை அங்கு சமுகமளிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார்.

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களின் பெயர்கள் கடந்த மார்ச் 28 ஆம் திகதிய உதயனில் பிரசுரமாகியிருந்தது தெரிந்ததே. (ஐ-9)

# உதயன்

## நல்ல தருணம்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சரியான சந்தர்ப்பம் ஒன்று கிட்டியுள்ளது. அதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகாவிடமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆயர்கள் இந்தக் கோரிக்கையைக் கூட்டாக விடுத்துள்ளனர்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதனை அவர்கள் இரண்டு தலைவர்களிடமும் வலியுறுத்தி உள்ளனர்.

வெளிநாடு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை முன்னெடுக்கக் கூடிய சூழ்நிலை இப்போது உருவாகி உள்ளதால், இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்பது ஆயர்கள் இருவரினதும் கருத்தாக உள்ளது.

இத்தகைய கருத்து அவர்களினது மட்டுமன்று, மக்களில் பெரும்பாலானோரின் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது. தமிழர் தரப்பும் சிங்களவர் தரப்பும் இதற்கு முன்னர் பல தடவைகள் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை நடத்திய போதிலும் அவை வெற்றி தரவில்லை.

இந்தியாவின் மத்தியஸ்த முயற்சி (படைகளையும் அனுப்பியமுறை) வித்தியாசமானதாக இருந்ததால் அதுவும் வெற்றி அளிக்கத் தவறிவிட்டது. இம்முறை மூன்றாம் தரப்பு ஒன்றின் உதவியுடன் முழுக்க முழுக்க அரசியல் பேச்சுக்களின் ஊடாகவே தீர்வுக்கு முயற்சிக்கப்பட உள்ளது. ஆகையால் சமாதானப் பேச்சுக்களுக்கான சாத்தியம் இம்முறை நிறையவும் உண்டென மக்கள் பலமாக நம்புகின்றனர்.

தமது இந்த நம்பிக்கை வீண் போகாமல் தடுப்பதில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் (மற்றெந்தத் தலைவர்களையும் விட) அதிக பங்குண்டு என்று மக்கள் கருதுகிறார்கள். அவர்கள் அவ்வாறே செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் அரசியல் பேச்சுவார்த்தை — சமாதானப் பேச்சுவார்த்தை — ஆரம்பமாக வாய்ப்பு அளிக்க வேண்டியது எல்லாத் தரப்புகளினதும் கடமையாகும்.

தமிழ் மக்கள் முழு அளவில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதால், அரசு — புலிகள் சமாதானப் பேச்சு விரைவில் ஆரம்பமாக வேண்டும்; வெற்றி அளிக்க வேண்டும்; என்பதில் தமிழ்க் கட்சிகள் உட்பட தமிழர் தரப்புகள் யாவும் ஆவலாக உள்ளன. தமிழர்கள் தமது பிறப்புரிமைகளை அனுபவித்துக் கௌரவமாகவும் சுயமரியாதையாகவும் ஆட்சி உரிமையுடனும் வாழ வகை செய்யும் தீர்வு ஒன்று ஏற்பட வேண்டும் என்பதில் மிக அக்கறையாக உள்ளனர்.

ஆகையால் தென்னிலங்கையில் உள்ள அரச தரப்புத் தவிர்ந்த ஏனைய தரப்புகளும் சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

சமாதானப் பேச்சு முயற்சிகளுக்கு முதல் உரிமை வழங்கும் விதத்தில், இராணுவ நடவடிக்கைகளை தணித்துக் கொள்வதில் இரு தரப்புகளும் முன்னர் எப்போதையும் விட இவ்வேளை அதிக நாட்டம் செலுத்துவது அவசியம்.

ஆயர்கள் கூறியுள்ளதுபோல, பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருவதால், இந்த நல்ல தருணம் நழுவிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானத்தை வளர்க்க ஆக்கபூர்வமாகச் செயற்படும் அமைப்பு

## விஞ்ஞான சங்கத்தின் எட்டாவது வருடாந்த அமர்வுகள் புதனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் கல்விக்கும் அறிவியலுக்கும் பெயர் பெற்றது. இப்பிரதேசத்திற்கென பல தனித்துவங்கள் உண்டு. பிராந்திய ரீதியில் பல முன்னோடியான அமைப்புக்களைத் தன்னகத்தே கொண்டு கலை, கலாசாரம், இலக்கியம், கல்வி, சமயம் என்பவற்றைப் பேணி வளர்த்து வருகின்றது. வட இலங்கைச் சங்கீத சபை, வெளிக்கள நிலையம், பிராந்திய தினசரிப் பத்திரிகைகள் போன்றவை எமது பிராந்தியத்திற்கே தனித்துவமானவையில் சிலவாகும். எமது பிரதேசத்தின் அறிவியல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் ஒரு தசாப்தத்திற்கு முன்னர்மறைந்த பேராசிரியர் அ. துரைராசாவின் தலைமையின்கீழ் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் உருவாக்கப்பெற்றது. இதுவும் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் இன்னொரு சிறப்பு அம்சமாகும். விஞ்ஞான ரீதியான அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் இப்படியானதொரு விஞ்ஞான சங்கம் இலங்கையின் வேறு பிராந்தியங்களில் இல்லை. ஆனால் தேசிய அளவிலானதொரு முன்னெடுப்பாக "இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம்" (SLAAS) அரசாங்கத்தின் நிதி உதவியுடன் செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடக்கூடியது. யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தில் தூய விஞ்ஞானப் பிரிவு (A), பிரயோக விஞ்ஞானப் பிரிவு (B), மருத்துவ விஞ்ஞானப்பிரிவு (C), சமூக விஞ்ஞானப்பிரிவு (D) என நான்கு பிரிவுகள் உண்டு.

இச் சங்கத்தின் பிரதான செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்:–

பாடசாலை மாணவர்களுக்கான விஞ்ஞானப் போட்டிகள்:

பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான ரீதியான அறிவியல் ஆற்றலை மேம்படுத்தி ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் வருடாந்தம், ஜனவரி மாதத்தில் விஞ்ஞான வினாவிடைப் போட்டி, விஞ்ஞான சொற்பொழிவுப் போட்டி, விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி, விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி என்பன ஒழுங்காக நடத்தப்படுகின்றன. இம்முறை போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் யாழ். மத்திய கல்லூரியில் ஜனவரி 29, 30 ஆம் திகதிகளில் நடைபெற்றன. பரிசளிப்பு வைபவம் ஒன்பதாவது அமர்வுடன் 07—04—2000 கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

★ பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்களின் விஞ்ஞான அறிவியற் பயிற்சியை கருத்திற்கொண்டு கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடனும், யாழ். பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்புடனும் ஒவ்வொரு வருடமும் பௌதிகம், இரசாயனம், உயிரியல், கணிதம், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பயிற்சிப் பட்டறை வகுப்புக்கள் மூலம் பயிற்சிகளை வழங்குதல். இவ் வருடம் பல நூறு ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

★ எமது மக்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு, பல வகையான உபயோகமுள்ள மருத்துவ, சமூக விஞ்ஞானக் கருத்தரங்குகள், விரிவுரைகள் என்பவற்றை ஒழுங்கு செய்தல்.

★ எமது பிரதேசத்தில் உள்ள விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களின் ஆய்வு முடிவுகளை வெளிக்கொணரு முகமாக வருடாந்தம் அதற்கென விசேட அமர்வினை நடத்துதல், முடிவுகளை வெளியிடுதல். இம்முறை ஐந்தாவது அமர்வில் 43 ஆராய்ச்சி முடிவுகள் வெளியிடப்படுகின்றன.

★ எமது மக்களின் வாழ்க்கை, பிராந்தியத்தின் பௌதீகச் சூழல் என்பவற்றை மையமாக வைத்து ஒவ்வொரு வருடமும் ஒரு கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டு விசேட செயற்பாடுகள் முடுக்கிவிடப்படுகின்றன. இவ் வருடத்திற்கான கருப் பொருள் மாறும் சூழலியல் – சவால்களும் தீர்வுகளும். தற்போது நடைபெறும் பலவித அனர்த்தங்களாலும் பலரின் பொறுப்பற்ற செயற்பாடுகளாலும் எமது பிரதேசத்தின் சூழலியலில் குறிப்பிடத்தக்க — விரும்பத்தகாத —மாற்றங்கள்இடம்பெறுகின்றன. இவ்வருட அமர்வுகளின் இரண்டாவது அமர்வாக (05-04-2000 10-15 A.m.) 'அங்கிகள் பல விதம்' கட்டுரையாளர் திரு. கே. எஸ். குகதாசனின், வசதிப்படுத்தலின் கீழ் சிறப்பான கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

அங்கத்தவர்களின் சந்தாவுடன் இயங்கும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், விஞ்ஞான அமைச்சின் ஆதரவுடன் இயங்கும் தேசிய சங்கத்தின் செயற்பாட்டிற்கு எந்த வகையிலும் குறைபோகாதளவில் மிகவும் சிறந்த எத்தனிப்புடனும் உற்சாகத்துடனும் செயற்பட்டு வருகின்றது.

''மாம்பழம் மாம்பழம் என்று கத்திக் கொண்டிருப்பதால் மாம்பழம் பெற முடியாது. ஒருமாமரத்தை நட்டுப் பேணினால் சில காலத்தின் பின்னாவது மாம்பழம் பெறலாம்'' என இராமகிருஸ்ணரின் போதனைகளில் காண்கின்றோம். இப்படியாக விஞ்ஞானம், விஞ்ஞானமென்று கதைபோடு நில்லாமல் ஆக்கபூர்வமான முறையில் ''யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கம்'' என்னும் கனிமரம் நடப்பட்டு வளர்க்கப்பட்டுவருகின்றது. அதன் காத்திரமான வளர்ச்சிக்கு தீர்க்கமான அறிவியலாளர்களினதும் இளம் விஞ்ஞானிகளினதும் யாழ். மக்களினதும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் சங்கம் நாடி நிற்கின்றது. ★

**கலாநிதி சி. சிறிசற்குணராசா**
பொதுச் செயலாளர்

# திறந்தபல்கலைக்கழகத்தில் நேற்று சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தின் 'தொழிலுரிமைத்துவமும் சிறு வணிக முகாமைத்துவமும்' மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று நிலைய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இணைப்பதிகாரியும் யாழ். பலகலைக்கழகத் துணைவேந்தருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தொழில் நுட்பக்கல்லூரி கோட்டம் 4 இன் பணிப்பாளரும் முன்னாள் யாழ். பிராந்திய இணைப்பதிகாரியுமான க. ஜெயரத்தினம் கௌரவ விருந்தினராகவும் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய முதல் மாணவனும் ஹாட்லிக் கல்லூரியின் அதிபருமான எம். ஸ்ரீபதி, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச. ஜெயராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 1996 — 97 கல்வியாண்டின் 17 மாணவர்களுக்கும் —

1998—99 கல்வியாண்டின் 68 மாணவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.

(ஐ-4)

## பண்டத்தரிப்பு, சில்லாலையில்

# வெங்காயச் செய்கையில் விவசாயிகள் நாட்டம்

சண்டிலிப்பாய், ஏப்ரல் 3

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயிகள் இம்முறை சின்ன வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயிகளில் பலர் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்காக விதை வெங்காயத்தை கொள்வனவு செய்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதேவேளை—

விதை வெங்காயத்தின் விலையும் இப் பகுதிகளில் அதிகரித்துள்ளது. தரங்குறைந்த விதை வெங்காயமே இங்கு கிடைப்பதால் வலிகாமம் தெற்கு மற்றும் வடமராட்சிப் பகுதிகளுக்குச் சென்று நல்ல தரமான விதை வெங்காயத்தை விவசாயிகள் கொள்வனவு செய்து வருகின்றனர்.

[ஐ-135]

## நாளை

பங்குனி 22

செவ்வாய்க்கிழமை

திதி: அமாவாசை நள்ளிரவு 12.15 வரை

நட்சத்திரம்: உத்தரட்டாதி பிற்பகல் 3.34 வரை.

அமாவாசை விரதம்

ராகுகாலம்: 10.38 12 09

யமகண்டம்: 3 09 4 39

(பகலுக்கும் இரவுக்கும் மழைய நேரப்படி)

## உதய வாக்கு

நீ வாழ்க்கையைக் காதலிக்கின்றாயா? அப்படியானால் பொழுதை வீணாக்காதே. ஏனென்றால் வாழ்க்கையின் மூலப்பொருளே நேரந்தான்.

- பிராங்கிளின்

# சுகாதார தொண்டர்களுக்கு பயிற்சி

சண்டிலிப்பாய், ஏப்ரல் 3

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 30 சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த மாதம் 28 ஆம் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது.

சங்கானையிலுள்ள மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் குடும்ப சுகாதாரம், நோய்த் தடுப்பு, போஷாக்கு உணவு ஆகியன குறித்து பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு உதவியாக இவர்கள் பணியாற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## தவக்காலச் சிந்தனை

(இருபத்தேழாம் நாள்)

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள் பதவி வந்தால் பாவ புண்ணியம் பார்ப்பதில்லை பாரானோர். இது இன்று நேற்றல்ல யேசுவின் காலத்திலும் நிகழ்ந்த வரலாற்று உண்மை. இயேசுவோடு மூன்று வருட காலம் வாழ்ந்து அவராலே உருவாக்கப்பட்ட சீடனான யூதாஸ் முப்பது வெள்ளிப் பணத்திற்காக மாசற்ற இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தான். இறுதியில் அப்பணம் எவருக்கும் பயனற்று இரத்த நிலத்தைக் கொள்வனவு செய்யவே உதவியது. இயேசு குற்றமற்றவர் என்பதை அறிந்தும் பதவியைத் தக்கவைக்க அநியாயத் தீர்ப்பிட்டான் பிலாத்து.

பணத்துக்காகக் காட்டிக் கொடுப்புக்களும் கழுத்தறுப்புக்களும் கடத்தல்களும் மிரட்டல்களும் மலிந்துவிட்டன எமது மண்ணிலே. எமது சுயநலத்திற்காக நிரபராதிகளை மாட்டிவிடும் போது சமூகத்தில், குடும்பத்தில் உருவாகும் பாதிப்புக்களைச் சிந்திக்கிறோமா? குற்றத்திற்கு உடந்தையாய் இருந்துவிட்டு ஊருக்குத் தெரிய வந்ததும் ஏககடுவி நழுவும் பிலாத்துவாக நீ இல்லையா? உனது செல்வச் செழுமைக்காக, பதவிக்காக அயலானைக் காட்டிக் கொடுத்த போது யூதாஸாக நீ மாறவில்லையா? சிந்தித்துப்பார்.

பணத்திற்காகக் குணத்தை இழக்காது — பதவிக்காக நீதி நேர்மையைப் புதைக்காது — நேரிய வழியில் உழைப்போம். அழிவுறும் மண்ணகச் செல்வத்தை வெறுத்து முடிவில்லா வாழ்வுதரும் விண்ணகச் செல்வத்தின் வழிகளை நாடுவோம்.

எஸ். யேசுதாஸ்
(கொழும்புத்துறை.)

# சின்னஞ்சிறு விளம்பரம்


## தவறிவிட்டது

தட்டாதெரு, சங்கத்தானை சாவகச்சேரி எனுமிடத்தைச் சேர்ந்த தங்கவடிவேல் விஜய மாலா என்பவருடைய தே. அ.அ (இல. 755853372 V), வி. அ.அ (இல.091007109) இரண்டு அடையாள அட்டைகளும் 27 - 03 - 2000 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து மிருசுவிலுக்கு வரும்போது (பஸ்ஸில்) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் விஜயா நகைத்தொழிற்சாலை, டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (75010)

01 - 04 - 2000 அன்று யாழ். போதனா வைத்தி சாலைக்கு அருகில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். அந்தோனி தங்கராசா 36, இராஜசிங்கம் வீதி, யாழ்ப்பாணம். (75028)

பிரான்பற்று முருகன்கோயிலடி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த நாகரத்தினம் தவநேசன் என்பவருடைய தேசிய அ. அட்டை, விசேட அ. அட்டை என்பன ஆனைக்கோட்டையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும். (75007)

## விற்பனைக்கு

A / 40 சோமசெற் கார் - என்ஜின்30 - கிறாங் 20 - வெளிநாட்டு ரயர்களுடன் கூடியது. உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நவரத்தினம், கச்சாய் வீதி, சாவகச்சேரி. (சி/11622)

## O/L கணிதம் 2000

உங்கள் வீடுகளுக்கு வந்து O/L முதல் தரம் 5 வரை கணித பாடத் திட்டத்திலிருந்து Paper வரை மிகத்துல்லியமாகக் கற்பிக்கப்படும். ஒரு மணித்தியாலத்துக்கு 50/- தொடர்பு: ஆசிரியர் சங்கர், 37, வேம்படி றோட், யாழ்ப்பாணம். (74979)

## வாடகைக்கு

யாழ். நகரில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் பேக்கரியும் அதனுடன் கூடிய கடையும் உடன் வாடகைக்கு விடப்படும். தொலைபேசி வசதியும் உண்டு. தொடர்பு: 65, பருத்தி வீதி, யாழ்ப்பாணம் (74924)

## நாற்றுகள் விற்பனை

நல்ல இன தக்காளி, கத்தரி, மிளகாய் நாற்றுகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: அறவழி கைதடி நுணாவில், சாவகச்சேரி. (74973)


## அடுத்த கட்ட நிவாரணம்

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு அடுத்த கட்ட நிவாரணம் வழங்குவது பற்றி தென்மராட்சி பிரதேச செயலகம் ஆலோசித்து வருகிறது.

பல குடும்பங்கள் தமது நிவாரணத்தை இரு இடங்களில் பதிவு செய்து பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது இதனைத் தொடர்ந்து பிரதேச செயலகங்களினால் நிவாரணம் வழங்கப்பட்டவர்களின் பட்டியல்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டுமீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. (ஐ 86)

# கடைகள் மூடிக் கிடப்பதால் பளையில் உணவுத் தட்டுப்பாடு

தென்மராட்சி, ஏப்ரல் 3

பளை நகரப்பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பினும் அங்கு உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. ஒரேயொரு கடை மட்டும் திறந்து வியாபாரம் செய்வதால் குழந்தைகளுக்கான பால்மா உட்பட அத்தியாவசியமான பொருள்கள் பலவற்றுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

பளைப் பிரதேசத்தில் நிலவும் பதற்ற நிலையினால் மக்கள் வெளியே நடமாட அஞ்சுகின்றனர். சிங்களம் பேசத் தெரிந்த ஒருசிலரே நகரப் பகுதிக்கு வந்து பொருள்களை வாங்கி வருகின்றனர்.

நகரப் பகுதியில் உள்ள பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளின் பொறுப்பாளர்கள் இடம்பெயர்ந்துள்ளதால் அந்தக் கடைகளில் சில மூடப்பட்டுள்ளன.

புலோப்பளைபுனித இராயப்பர் தேவாலயம், புனித மாதா தேவாலயம், புலோப்பளை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகியவற்றில் புலோப்பளை, அல்லிப்பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

ஷெல் வீச்சுக்களால் காயமடைந்த நகரப் பகுதி தேநீர்க் கடை உரிமையாளரான கோபால் (வயது 53) (வண்ணான்கேணி) பளை ஆஸ்பத்திரி சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் கடமையாற்றிய மாமா என அழைக்கப்படும் வலது குறைந்த வரும் பலியாகியுள்ளதாகக் கூறப்பட்டது.

பளை நகரம், புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, அல்லிப்பளை, முல்லையடி, வண்ணான்கேணி, தம்பகாமம், பெரியபளை ஆகிய பகுதிகளில் மக்கள் தமது வீடுகளிலேயே அடைபட்ட நிலையில் உள்ளனர். (ஐ-117)

# தென்னிந்தியத் திருச்சபைக் குழு அம்பன் பகுதிக்குச் சென்றது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

தென்இந்தியத் திருச்சபையைச் சேர்ந்த குருமார்கள் கொண்ட குழுவொன்று கடந்த வெள்ளியன்று அம்பன் பகுதிக்குச் சென்று அங்கு இடம் பெயர்ந்து தங்கியுள்ள மக்களைப் பார்வையிட்டதுடன் அவர்களது சேமநலன்களையும்கேட்டறிந்துகொண்டது.

அத்துடன் இக்குழுவினர் குடத்தனை, மருதங்கேணி நாகர்கோயில் ஆகிய பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மக்களைப்பார்வையிட்டனர். அங்கு மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் சிறு குழந்தைகளுக்கான தொற்று நீக்கு வகைகள் கூட இல்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை இக்குழுவினர் நாகர்கோயில் பகுதியில் இருந்து வெளியேற முடியாதிருந்த 6 வயோதிபர்களை அப்பகுதி இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவரின் அனுமதியுடன் கூட்டி வந்து அம்பன் பாடசாலையில் உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

இக்குழுவினரால் அம்பனில் உள்ள அமெரிக்க மிஷன் பாடசாலையில் தங்கியிருக்கும் 125குடும்பங்களுக்கு பால்மா, சீனி, சோப், பாய் என்பன வழங்கப்பட்டன. குடத்தனை தென் இந்தியத் திருச்சபையில் உள்ள ஐந்து குடும்பங்களுக்கும் மேற்படி பொருள்களை வழங்கினர். அத்துடன் 30 குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு பால்மாவும் வழங்கப்பட்டன. (ஐ-10)

# வடலியடைப்புக் கிராமத்துக்கு மின் வழங்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஏப்ரல் 3

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் வடலியடைப்பு கிராமத்திற்கு மின் வழங்குமாறு இலங்கை மின் சாரசபையின் யாழ் பிரதேச பொது முகாமையாளருக்குக் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

வடலியடைப்புக் கிராமத்திற்கு மிகவும் சமீபமாகவுள்ள சித்தன்கேணிப் பகுதிக்கும், சங்கானை நிற்சாமம் பகுதிக்கும் ஏற்கனவே மின் விநியோகம் செய்யப்பட்டிருந்த போதிலும் வடலியடைப்புப் பகுதிக்கு இதுவரை மின் வழங்கப்படவில்லை. இது கவலையளிப்பதாக உள்ளது. தயவுசெய்து கூடிய விரைவில் இப்பகுதிக்கு மின் விநியோகத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுஉதவுமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் க. அரசரத்தினம் இக்கடிதத்தைச் சங்கத்தின் சார்பில் அனுப்பி வைத்துள்ளார். (ஐ-135)

## பூரான் தீண்டியது

வடமராட்சி, ஏப்ரல் 3

பக்கத்து வீட்டில் ரீ. வி. படம் பார்க்கச் சென்ற ஏழு வயதுச் சிறுமி ஒருத்தி பூரான கடிக்கு இலக்கானார்.

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சிறிதாஸ் அபிரா என்ற சிறுமியே பூரான் கடிக்கு இலக்கானவராவர். (ஐ-173-15)


## 'குமண'

## கப்பலில் பொருள்களை ஏற்றுவதற்கு விண்ணப்பித்தோர் கவனத்திற்கு

தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'குமண' கப்பலில் 05 - 04 - 2000 தொடக்கம் பொருள்களை ஏற்றக் கூடியதாக இருப்பதனால் பொருள்களை ஏற்றுவதற்கு விண்ணப்பித்தவர்கள் 03 - 04 - 2000 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்குத் தவறாது யாழ். செயலக புனர்வாழ்வுப்பகுதிக்குச் சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

[11623)


# வெளி மாவட்டங்கள் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் முதலாம் திகதி வரை) பதிவு இலக்கங்களின் ஒருபகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியது அதன் மறு பகுதி வருமாறு:-

## உடுவில்

(134252ஏ), (134352பி),
(134252சி), (136144ஏ),
(136339ஏ), (136339பி),
(136349ஏ),
(136355ஏ) (136355பி),
(136360 ஏ), (136365 ஏ),
(136366 ஏ), (136372 ஏ),
(136372 பி), (136375 ஏ),
(136379 ஏ), (136379 பி),
(136379 சி), (136381 ஏ),
(136387 ஏ), (136387 பி),
(136387 சி), (139888 ஏ)
(139888பி), (139888சி),
(131731ஏ), (131760ஏ),
(135535ஏ), (135963ஏ),
(135963பி), (138460ஏ),
(138460பி), (138494ஏ),
(138504ஏ), (139547ஏ),
(139595ஏ), (139595பி),
(139595சி), (139596ஏ),
(139654ஏ),
(13964பி), (13965ஒ4சி),
(139658ஏ), (139658பி),
(139664ஏ), (139664பி),
(139698ஏ), (139703ஏ),
(139728ஏ), (139730ஏ),
(139730பி), (139741ஏ),
(139755ஏ), (139814ஏ),
(139814பி), (141190ஏ),
(141195ஏ), (141301ஏ),
(141302ஏ), (141305ஏ),
(141334ஏ), (141419ஏ)
(141419பி),

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 2 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

## சங்கானை

[135538 ஏ],[135587 ஏ],
[135587 பி]. [135587 சி],
[135713 ஏ], [135783 ஏ],
[135900 ஏ], [135918 ஏ],
[135919 ஏ], [135919 பி],
[135919 சி], [138175 ஏ],
[138175 பி],
(138197ஏ), (138197பி),
(138197சி), (138197டி),
(138198ஏ), (138243ஏ),
(138243பி), (138366ஏ),
(138366பி), (138472ஏ),
(138516ஏ), (139587ஏ),
(139646ஏ), (139646பி),
(139720ஏ).
[139732ஏ], [139747ஏ],
[139747பி], [139747சி],
[139788ஏ], [139788பி],
[139788சி], [139789ஏ],
[139789பி], [141326ஏ],
[141340ஏ], [141340பி],
[141397ஏ].

## கோப்பாய்

(123921ஏ), (124135ஏ),
(124135பி), (128089ஏ),
(133924ஏ), (133924பி),
(133924சி), (133924டி),
(133924ஈ), (133924எவ்),
(134015ஏ), (134015பி),
(134072ஏ), (134072பி),
(134085ஏ).
[134091ஏ], [134111ஏ],
[134111பி], [134153ஏ],
[134167ஏ], [134183ஏ],
[134187ஏ], [134187பி],
[134190ஏ], [136217ஏ],
[136217பி], [136226ஏ],
[136237ஏ], [136237பி],
[136240ஏ], [136241ஏ],
[136241பி].
(136266ஏ), (136266பி),
(136273ஏ), (136287ஏ),
(136289ஏ), (136290ஏ),
(136293ஏ), (136296ஏ),
(136296பி), (136410ஏ),
(136410பி), (136429ஏ),
(136452ஏ), (136465ஏ),
(136466ஏ), (136468ஏ),
(136468பி), (136472ஏ),
(136472பி), (136512ஏ),
(136512பி), (136527ஏ),
(136529ஏ), (136529பி),
(136542ஏ), (136542பி),
(136624ஏ), (136625ஏ),
(136628ஏ), (136628பி),
(136632ஏ), (136634ஏ),
(136634பி), (136634சி),
(136634டி), (136635ஏ),
(136721ஏ), (136767ஏ),
(136790ஏ), (136790பி),
(136796ஏ), (136796பி),
(139434ஏ),
(139434பி), (139437ஏ),
(139448ஏ), (139448பி),
(139449ஏ), (139449பி),
(139453ஏ), (139453பி),
(139455ஏ), (139854ஏ),
(139891ஏ), (139892ஏ),
(139894ஏ), (139894பி),

## நல்லூர்

(128326ஏ), (128326பி),
(128350ஏ), (128350பி),
(136112ஏ), (136152ஏ),
(136153ஏ), (136166ஏ),
(136741ஏ), (136852ஏ),
(136854ஏ), (136854பி),
(136855ஏ), (136855பி),
(139457ஏ), (139477ஏ),
(139928ஏ), (139928பி),
(141008ஏ), (141009ஏ),
(129027ஏ), (130557ஏ),
(131780ஏ), (131813ஏ),
(135490ஏ), (135530ஏ).
(135793ஏ), (135793பி),
(135979ஏ), (138441ஏ),
(138441பி), (139570ஏ),
(139570பி), (111289ஏ).

## சண்டிலிப்பாய்

(128909ஏ), (128909பி),
(130818ஏ), (130818பி),
(131843ஏ), (131843பி),
(131843சி), (131843டி),
(135599ஏ), (135599பி],
(135631ஏ), (135631பி),
(135631சி), (135661ஏ),
(135661பி), (135801ஏ),
(135801பி), (135802ஏ),
(135802பி), (135867ஏ),
(138106ஏ), (138106பி),
(138123ஏ), (138128பி),
(138139ஏ), (138144ஏ),
(138164ஏ], (138195ஏ),
(138196ஏ), (138200ஏ),
(138223ஏ), [138257ஏ],
(138273ஏ), (128303ஏ),
(138338ஏ), (138519ஏ),
(138519பி), (138543ஏ),
[138548ஏ].
(138566ஏ) (139562ஏ),
(139562பி), (139686ஏ)
(139809ஏ), (141403ஏ),
(141403பி), (141403சி),
(141403டி), (141403ஈ),
(141403எவ்)

## தெல்லிப்பழை

(131735ஏ), (131735பி),
(131762ஏ), (131762பி),
(135542ஏ), (138346ஏ),
(138346பி), (139617ஏ),
(139617பி)

## உடுவில்

(123817ஏ), (123817பி),
(134127ஏ), (134127பி),
(134223ஏ), (134223பி),
[136320ஏ], [136324ஏ],
[136324பி], [136329ஏ],
[136329பி], [136329சி],
[136373ஏ], [136373பி],
[136378ஏ], [136396ஏ],
[136565ஏ], [136565பி],
[136699ஏ], [136699பி],
[136781ஏ], [136781பி],
[129063ஏ], [129063பி],
[129253ஏ], [134826ஏ],
[135510ஏ], [135579ஏ],
[135579பி], [135579சி],
[135744ஏ], [135744பி],
[135744சி].
(135929ஏ), (135929பி),
(135952ஏ), (135952பி),
(138095ஏ), (138095பி),
(138095சி), (138095டி),
(138100ஏ), (138207ஏ),
(138230ஏ), (138266ஏ),
(138266பி), (138363ஏ),
(139724ஏ), (141194ஏ),
(141194பி).

[க]

### பயிலுநர் ஆசிரியர்களாக

## யாழ். கல்வி வலயத்தில் 15 பேர் இன்று முதல் நியமனம்

யாழ்ப்பாணம்: ஏப். 3

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 15 பேருக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம் கிடைத்துள்ளது.

இவர்கள் தமது நியமனக் கடிதங்களை இன்று திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நியமனம் கிடைத்துள்ளோரின் பெயர் விவரம் வருமாறு:-

ஜெகதீஸ்வரி துரைராசா (வண்ணார் பண்ணை), தியாகரி நடராஜா (அச்செழு வடக்கு,நீர்வேலி)' சுதாஜினி ஜெகநாதன் (புத்தூர்) கந்தசாமி கௌரி (வளலாய், அச்சுவேலி), ராஜினி சுப்ரமணியம் (உரும்பிராய் வடக்கு),ரஜினி சிவஞானம் (கலம்பரை கோப்பாய் வடக்கு), சின்னத்துரை தர்மானந்தி(கோப்பாய் தெற்கு), வக்ஷலா நடராஜா (கொக்குவில் கிழக்கு), தனபாலன் பிரியலட்சுமி (நீராவியடி, யாழ்ப்பாணம்), கந்தையா ரவிகரன் (17, செம்மணி வீதி), ஷரோ பேனிதா ஜோசப் சாந்தராஜன் (815/13, ஆஸ்பத்திரி வீதி), சுதர்சினி குணநாயகம் (99 ஏ, வீதி அரியாலை), ஜேசுதாசன் பிரபாகரன் (80 புனித பெனடிக் வீதி), தாரணி பத்மநாதன் (நீர்வேலி வடக்கு), திருமகள் பத்திநாதன் (யாவத்தை, கோப்பாய் வடக்கு), (இ-க)

## 2002 இன் பரீட்சை ஏப்ரலில்

கொழும்பு, ஏப். 3

2002 ஆண்டுக்கான ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கான இவ்வருட புதிய பிரிவு எதிர் வரும் மே மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் — அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோருடன் ஆலோசித்து இது சம்பந்தமான ஏற்பாடுகளை செய்யும்படி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும்— கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஆர். பி. குணவர்த்தன தெரிவித்தார். (இ-4)

### மோதல்களின் போது உயிரிழந்த

## 31 புலிகளின் விவரம் அறிவிப்பு

வவுனியா, ஏப். 3

தொடரும் 'ஓயாத அலைகள் — 3' நடவடிக்கையின் போது உயிரிழந்த மேலும் 31 புலிகளின் பெயர் விவரங்களைப் 'புலிகளின் குரல்' வானொலி வெளியிட்டுள்ளது.

அவற்றின் விவரம் வருமாறு:-

கடந்த மார்ச் 26ஆம் திகதி இடம்பெற்ற மோதலின் போது —

★ கரும்புலி மேஜர் தனுசன் (தம்பிராசா இலங்கேஸ்வரன் — திருகோணமலை).

★ கரும்புலி மேஜர் சுதாசினி (தெய்வேந்திரம்பிள்ளை ஜெயசுகி — யாழ்ப்பாணம்).

மார்ச் 27 இல் இடம்பெற்ற மோதலில் —

★ மேஜர் வாணன் அல்லது சொக்கன் (சோமசுந்தரம் இராஜேந்திரம் — யாழ்ப்பாணம்).

★ 2 ஆம் லெப்டினன்ட் சசி (யோசப் புவனேஸ்வரி — வட்டக்கச்சி).

★ கப்டன் சுடர்விழி (தர்மபாலா சுகந்தினி — யாழ்ப்பாணம்).

★ லெப்டினன்ட் அன்பு வேங்கை (கருணாகரன் அமுதா — முள்ளியவளை).

★ கப்டன் அன்புவிழி (பூபாலசிங்கம் லீலாவதி — யாழ்ப்பாணம்).

★ லெப்டினன்ட் அன்பரசி (கந்தையா மோகனாம்பிகை — இராமநாதபுரம்).

★ 2 ஆம் லெப்டினன்ட் உமா (கந்தையா பாமினி — பூநகரி).

★ மேஜர் கோகிலா (இராசதுரை ஜசோதராணி—நெடுங்கேணி).

மார்ச் 28 இல் இடம்பெற்ற மோதலில்

★ தென்னவன் கந்தசாமி சந்திரமோகன் — மன்னார்).

மார்ச் 29 இல் இடம்பெற்ற மோதலில் —

★ கீர்த்திகா (செல்வம் சிவரஞ்சினி — யாழ்ப்பாணம்).

★ பாவை(நடேசப்பிள்ளை நந்தினிதேவி — திருகோணமலை).

★ இளந்திரையன் (இராமசாமி சுந்தரலிங்கம் — யாழ்ப்பாணம்)

★ ஆரமுதன் (கந்தசாமி நாகேஸ்வரன் — யாழ்ப்பாணம்).

★ மதியன் அல்லது கன்னியரசன் (இராமச்சந்திரன் லங்கேஸ்வரன் — வவுனியா).

★ ஈழச்செல்வன் (ஜேம்ஸ் ரதீஸ் — யாழ்ப்பாணம்).

★ கபிலன் (வெள்ளை யுவராஜேஸ்வரன் — திருகோணமலை).

★ கப்டன் துரியோதரன் (ஆனந்தக்குமாரசாமி சர்மிலன் — யாழ்ப்பாணம்).

★ வர்ணி (அந்தோனி யோகநாயகி— இரணைதீவு).

★ கப்டன் கண்ணதாஸன் (ஆறுமுகம் கஜரூபன் — மட்டக்களப்பு).

★ வாணன் (நல்லதம்பி ராசன் — கிளிநொச்சி).

★ இசையரசன் (மாசிலாமணி மில்லன் பிரவுண் — யாழ்ப்பாணம்).

★ அறிவுபுகழன்(இராஜேந்திரன் பிரபாகரன் — யாழ்ப்பாணம்).

★ தேன்மொழியாள் (சண்முகம் புஸ்பராணி — கிளிநொச்சி).

★ கௌதமி (கந்தசாமி ராதிகா — யாழ்ப்பாணம்).

★ வைகை அல்லது துரைமதி (இரத்தினகோபால் டயானா — கிளிநொச்சி).

★ கானமலர் (பிச்சையன் கமலாதேவி — வவுனியா).

★ பாக்கியம் அல்லது பாக்கி (தேவசகாயம் யேசுதாஸன் — யாழ்ப்பாணம்).

★ கருமுகிலன் (பேரம்பலம் கிருபாகரன் — மல்லாவி).

சிறப்பு எல்லைப் படையைச் சேர்ந்த நாகன் (சிதம்பரப்பிள்ளை செந்தில்நாதன் — யாழ்ப்பாணம் இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை) ஆகியோரே உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த வாரம் வடமராட்சி கிழக்கில் ஆரம்பமான 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையில் மொத்தம் 60 போராளிகள் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

(ஐ-9)

### எல்லைப்பிரதேசத்தை பாதுகாப்பதற்கு

## திருமலையில்தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ விரும்பியவர் தந்தை செல்வா

### நினைவு ஆராதனையில் உரை

நல்லூர், ஏப். 3

தமிழர்களுக்கான பல்கலைக்கழகம் திருகோணமலையில் அமைவதன் மூலம் எமது எல்லைப் பிரதேசம் பாதுகாக்கப்படும் என்று விரும்பியவர் தந்தை செல்வநாயகம். அன்று அவரது கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நாம் இன்று அதன் பாதிப்பை உணர்கிறோம். அங்கே பல்கலைக்கழகம் அமைந்திருந்தால் எமது எல்லைப்பிரதேசம் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

தந்தை செல்வநாயகம் அவர்களின் 102 ஆம் ஆண்டு நினைவு ஞாபகார்த்த ஆராதனையில் பேசிய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். சகாயசீலன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியமும் கத்தோலிக்க மறைமாவட்டமும் இணைந்து பரி. யோவான் ஆலயத்தில் நன்றி செலுத்தும் ஆராதனையை நடத்தின.

விரிவுரையாளர் சகாயசீலன் மேலும் பேசும் போது கூறியதாவது:-

விசேட ஆளுமை மிக்க தலைமைத்துவத்தை தந்தை கொண்டிருந்தார். அவரது வாழ்க்கை வித்தியாசமான தலைமைத்துவப்பண்பைஏற்படுத்தியிருந்தது. நெப்போலியன், மகாத்மா, ரூஸ்வெல்ட், வின்சன்ட் சேர்ச்சில் போன்றவர்களுக்கு நிகராக விளங்கியவர் தந்தை செல்வா.

அரசியல் குழப்பம்மிக்க வேளையில் புத்திக் கூர்மையும் விவாதத் திறமையும் மிக்க ஜி. ஜி பொன்னம்பலம் அவர்களைப் போன்று என்னால் சிறந்த தலைமையை வழங்க முடியுமா என்று சிந்தித்த அவர் தன்னடக்கம் மிக்க அரசியல்வாதியாவார். அவருக்கு டீ. எஸ். சேனநாயக்கா அமைச்சர் பதவி வழங்காமையினால் புதியகட்சி தொடங்கினார் என்று சொல்லப்பட்டாலும் கொள்கைப் பற்றும் உறுதியும் நேர்மையுமே அதற்குக் காரணமாக இருந்தது. அவர் இலகுவில் உணர்ச்சிவசப்படக் கூடியவரல்லர். தான் நேசித்த மக்கள் அளித்த வாக்குகளால் ஒரு சமயம் தேர்தலில் தோல்வியடைந்த போதும் அதனைப் பொருட்படுத்தாது மக்களுக்காக பாடுபட வேண்டும் என்று செயற்பட்டவர்.

கொள்கை வேறுபாடு காரணமாக 1949 இல் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த போது சிறுபான்மை இனத்தின் உரிமைகள் சமஷ்டி மூலம் தீர்க்கப்பட வேண்டும்; அது தவறினால் தனிநாடு தான் வழி என்று கூறினார். எனினும் சமஷ்டி ஆட்சியின் மூலம் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே எமது நோக்கம் என்பதையும் தெளிவு படுத்தினார். சமஷ்டி அமைப்பு முறை குறித்து சிங்கள மக்கள் மத்தியிலும் தெளிவான கருத்துக்களைக் கூற அவர் தவறவில்லை. சமஷ்டி என்பது தனி நாடல்ல; அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் ஆட்சி முறை என்பதை எடுத்துக் காட்டினார். பல சந்தர்ப்பங்களில் தனியாக நின்று எத்தனையோ விடயங்களைச் சாதித்தவர் தந்தை செல்வா என பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டிசில்வாவே எடுத்துக் கூறியிருக்கிறார். முதலாவது குடியரசு உருவாக்கப்பட்ட போது அது தமிழர்களின் அபிலாசைகளுக்கு இசைவானதல்ல என்பதை ஆழமாக விளக்கி தனது பதவியைத் துறந்தார்.

#### மனித நேயம் மிக்க தலைவர்

தீர்க்க தரிசனம் மிக்கவர் மட்டுமன்றி மனித நேயமும் மிக்க தலைவர் அவர். 1948 — 49 ஆம் ஆண்டுகளில் இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிரான சட்டங்களைக் கண்டித்த அவர் ''இன்று இந்தியத் தமிழர்கள் நாளை நாங்கள்'' என்றார். அது இன்று உண்மையாகி விட்டது கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு விழிப்புணர்வை ஊட்டிய அவர் சிங்கள மக்களையும் நேசித்தார்.

அரசியல்என்பது சாக்கடை என்ற நிலையை மாற்றி நேர்மையான அரசியலைக் கைக்கொண்டதன் மூலம் அரசியலுக்குச் சிறப்பைத் தேடித் தந்த அந்தத் தலைவரை நாம் நினைப்பதும் பேசுவதும் சாலச் சிறந்தது— என்றார்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தமது இறை செய்தியில் தெரிவித்ததாவது;-

#### போராட்டச் சிந்தனையை விட்டுச் சென்றவர்

எமது மக்களின் உரிமைக்காக ஒலித்த அவரது குரல், செயற்பாடுகள், ஒப்பந்தங்கள் எல்லாமே தோல்வியில் முடிந்த போதும் மனம் தளராது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டவர் தந்தை செல்வநாயகம். எமது மனம் சலிப்படையாமல் உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்ற சிந்தனையை தமிழ் மக்களுக்கு விட்டுச் சென்றுள்ளார். அவர் காட்டிய பாதையில் நாம் தொடர்ந்து செல்ல வேண்டும். யேசுக் கிறிஸ்து மக்களுக்காக எத்தனையோ செய்தும் அவரது முயற்சி தோல்வியிலேயே முடிந்தது அதே போன்று தான் தந்தை செல்வாவும் தோல்விகளைத் தழுவினார். அவர் காட்டிய பாதையில் இறைவனின் பாதையைக் காணக்கூடியதாக இருக்கிறது — என்றார்.

முன்னதாக விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. பெரும்எண்ணிக்கையானோர் அதில் கலந்து கொண்டனர்.

(ஐ-103)

## முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகள் கவனிக்கப்பட வேண்டும்

### பதில் அமைச்சர் ஹிஸ்புல்லா கூறுகிறார்

கொழும்பு, ஏப் 3

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அரசுக்கும் ஐ. தே. கவுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகளும் அவசியம் முன்வைக்கப்பட வேண்டும்.

வெகுஜன தொடர்பூடாகத் துறைப் பதில் அமைச்சர் எம். ஏ எம் ஹிஸ்புல்லா மேற்கண்டவாறு கூறினார்.

அமெரிக்காவின் 'சானல் 1' தொலைக்காட்சிக்கு கொழும்பில் வைத்து நேற்று முன்தினம் பேட்டி அளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

பொ. ஐ மு. அரசு பதவி ஏற்ற பின்னர் வடக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே எந்தவித வன்முறைகளும் ஏற்படவில்லை. கடந்த அரசின் ஆட்சியில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர் என்றும் அவர் சொன்னார்.

(இ-6)

## யுத்தம் நீடிப்பது குறித்து ஐரோப்பிய யூனியன் கவலை

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் ஆயுதப் போராட்டம் தொடர்ந்தும் நீடிப்பது பற்றி ஐரோப்பிய யூனியன் ஆழ்ந்தகவலை தெரிவித்துள்ளது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு அது சம்பந்தப்பட்ட சகலரையும் கேட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளால் சிறந்த பலன் காணப்படுகிறது எனவும் ஐரோப்பிய யூனியன் தெரிவித்தது.

இருந்தபோதிலும் தன்னிச்சையான போக்கில் மேற்கொள்ளப்படும் கைதுகள், காணாமல் போதல், சித்திரவதைகள், சட்டத்துக்கு முரணான வகையில் செய்யப்படும் படுகொலைகள் பற்றி அது கவலை தெரிவித்தது

[இ-4]

## மாணவருக்கு இன்று முதல் சீருடைத் துணி விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணி விநியோகம் இன்று முதல் நடைபெறவுள்ளது

இன்று தென்மராட்சி தீவக வலயங்களுக்கும் நாளை வடமராட்சி வலிகாமம் வலயங்களுக்கும் புதன்கிழமை யாழ்ப்பாண வலயத்துக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்து சீருடைக்கான துணி விநியோகிக்கப்பட உள்ளது

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இவற்றைப் பெற்று புத்தாண்டுக்கு முன்னர் மாணவர்களுக்கு விநியோகிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(இ-4-5)

## மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க

# நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் ஏழு இடங்களில் நடமாடும் சேவை

வலி. வடக்கு, ஏப்ரல் 3
நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை இம்மாத நடுப்பகுதி முதல் இடம்பெறவுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சின் பணிப்புரைக்கமைய நடைபெறவுள்ள இச் சேவையில் பல்வேறு திணைக்களங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகள் அனைத்தும் ஏழு பிரிவுகளாக வகுக்கப்பட்டு அந்த ஏழு பிரிவுகளிலும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

அரியாலை, கொக்குவில், கோண்டாவில், வண்ணார்பண்ணை, நல்லூர், திருநெல்வேலி, கந்தர்மடம் ஆகிய பிரிவுகளில் நடமாடும் சேவை இடம்பெறும்-

முதலில் இச் சேவையை அரியாலைப் பகுதியில் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், மீள்குடியமர்வு, திருமணப் பதிவு, விவசாயம், நஷ்டஈட்டுக் கொடுப்பனவு சம்பந்தமான விடயங்கள் தொடர்பான மக்களின் பிரச்சினைகள் இந்தச் சேவையின்போது முன்னுரிமை கொடுத்துக் கவனிக்கப்பட உள்ளன.

(ஐ-86)

## மேலும் இரு கூ. சங்கங்களுக்கு லொறிகள் கப்பலில் வந்தன

அரியாலை, ஏப்ரல் 3
யாழ். குடாநாட்டில் உள்ள மேலும் இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு லொறிகள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட விவசாய, உற்பத்தி, நுகர்வோர் கூட்டுறவுச் சமாசத்தின் உதவியுடன் இந்த லொறிகள் எடுத்து வரப்பட்டுள்ளதாக சமாசத் தலைவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி, சங்கானை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இந்த லொறிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதமும் நான்கு லொறிகள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ-17)

## இரு சகோதரர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3
உலக்கையால் அடித்துக் கொலை செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மரணமானவரின் இரு சகோதரர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நவரட்ணராசா என்பவரே இறந்தவர் ஆவார்.

அவரது சகோதரர்களான சு. கணேசலிங்கம், சு. தர்மராஜா ஆகிய இருவரும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் இ. த. விக்னராஜா வழக்கை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(இ-9)

## பளை ஆஸ்பத்திரியில் ஒரு டாக்டரே கடமை

யாழ்ப்பாணம், ஏப். 3
பளை வைத்தியசாலையில் மருந்துப் பொருள்கள் இல்லாமையினால் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாதிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பளை நகரத்திலிருந்து நடத்தப்படும் ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி இந்த வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு ஊழியர்கள் எவரும் முன்வரவில்லை என்றும் —

அங்கு ஒரு டாக்டர் மட்டுமே தற்பொழுது கடமையாற்றி வருவதாகவும் —

தெரிவிக்கப்படுகிறது

டாக்டர் எஸ். அம்பிகைபாகன் மட்டுமே இந்த வைத்தியசாலையில் தற்பொழுது தனித்து கடமையாற்றி வருகிறார்.

ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களினால் 50 பேர் இந்த வைத்தியசாலையில் கடந்த 27 ஆம் திகதி முதல் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் இவர்களில் 25 பேர் கடும் காயமடைந்த நிலையிலிருந்ததாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

பளையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களினால் பலியானவர்களில் இத்தாவிலைச் சேர்ந்த எஸ். செல்லத்துரை, எஸ். கோபாலு ஆகியோரின் சடலங்கள் புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5-9)

## பொருள்களின் தரம், நிறையை சரிபார்த்துப் பெற்றுக் கொள்க

### கூ. சங்கத் தலைவர் வேண்டுகோள்

அரியாலை, ஏப்ரல் 3
நிவாரணப் பொருள்களின் அளவு, நிறை, தரம் என்பவற்றைப் பொது மக்கள் சரிபார்த்துப் பெற்றுக்கொள்வது அவர்களின் கடமையாகும்.

இவ்வாறு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

சங்கத்தின் கிளைகள் ஊடாக வழங்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள்களை மக்கள் சிட்டையைப் பார்த்து அதன் அடிப்படையில் பெற்றுக் கொள்வது அவர்களின் பொறுப்பாகும். பொருள்களின் நிறை, அளவுகளைச் சரி பார்த்துப் பெற்றுக்கொள்ளுமாறு சங்கக் கிளைகளில் விளம்பர அட்டைகள் வைக்கப்பட்டுள்ளன. சங்கத்தின் வளர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கு சகலரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கூட்டுறவுத்துறையில் தகுதியானவர்கள் மற்றும் தரம் வாய்ந்தவர்களை வருங்காலத்தில் இணைப்பதன் மூலமே கூட்டுறவுத்துறையை மேலும் வளர்க்க முடியும்.

இதற்கு கூட்டுறவுத் திணைக்களம் மற்றும் கூட்டுறவாளர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் — என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-17)

## விபத்தில் மாணவி காயம்

சாவகச்சேரி, ஏப்ரல் 3
சாவகச்சேரி — சங்கத்தானை பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் —சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த கல்வயலைச் சேர்ந்த பாலசிங்கம் — தர்சினி (வயது 21) என்ற பல்கலைக்கழக மாணவி தலையில் படுகாயமடைந்தார். இவர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார்.

(ஐ-31-15)

## சைக்கிள் திருட முயன்றவர் கைது

வலி.வடக்கு, ஏப்ரல் 3
திருநெல்வேலிச் சந்தைக்கு அருகில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்தின் வாசலில் நிறுத்தியிருந்த சைக்கிள் ஒன்றைத் திருட முயன்றவர் கையும் மெய்யுமாக பொது மக்களால் பிடிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் நண்பகல் சைக்கிளைத் திருடிக்கொண்டு ஓடமுற்பட்ட போதே அப்பகுதியில் நின்றோர் திருடியவரைத் துரத்திப் பிடித்தனர். கோப்பாய் சூசையப்பர் கோயிலடியைச் சேர்ந்த கனகரத்தினம் றொபின் என்பவரே பிடிபட்டவராவார்.

இவர் பின்னர் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டார்.

(ஐ-86)

## பளைப் பிரதேச செயலகம் மீசாலையில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3
தற்பொழுது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையை அடுத்து பளைப்பிரதேச செயலகம் இன்றுதிங்கட்கிழமை தொடக்கம் மீசாலையில் சியாமளாமில் ஒழுங்கையில் உள்ள ஒரு வீட்டில்தற்காலிகமாக இயங்கவுள்ளது.

சகல ஊழியர்களையும் இன்று தொடக்கம் அங்கு கடமைக்கு வருமாறு பளைப் பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி தெரிவித்துள்ளார்.

பளைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வேறுஇடங்களில் தங்கியிருக்கும் அனைத்துக் குடும்பங்களும் அங்கு வந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10-9)

## இடம்பெயர்வோர் பதிவு செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3
தற்பொழுது குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் யுத்த சூழ்நிலையை அடுத்து இடம் பெயர்ந்துள்ளமக்கள் அனைவரையும் அந்தந்தப்பகுதிகிராம அலுவலர்களிடம் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ-10-9)

## உற்சவகாலக் கடைகளில் சுகாதாரம் பேண வலியுறுத்து

சண்டிலிப்பாய், ஏப்ரல் 3
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயவருடாந்த உற்சவ தினங்களில் இனிப்புப் பண்டங்கள் மற்றும் உணவுப் பொருள்களை விற்பனை செய்வோர் சுகாதார விதிகளுக்கிணங்க அவற்றைக் கண்ணாடிப் பெட்டிகளில் வைத்து விற்பனை செய்ய வேண்டும் என்று இப்பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

ஐஸ்கிறீம் கடைகள், உணவு விடுதிகள், தேநீர்க் கடைகள் ஆகியன சுகாதாரச் சீர்கேடுகள் இல்லாதவாறு செயற்பட வேண்டும். தொற்று நோய் ஏற்பட இடமளிக்காதவிதத்தில் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும் இது விடயமாகத் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

உற்சவத்தை முன்னிட்டு புதிதாக உணவு விடுதிகளையும் தேநீர்க் கடைகளையும் ஆலய சுற்றாடலில் அமைக்க விரும்புவோர் பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## பாணின் தரம் குறித்து கலந்துரையாடல்

நெடுந்திவு, ஏப்ரல் 3
நெடுதீவுப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பாணின் தரம் குறைந்துள்ளதாகவும் தரமான பாணை உற்பத்தி செய்து பாவனையாளர்களுக்கு விநியோகிக்குமாறும் பிரதேச சபை பாண் உற்பத்தியாளர்களைக்கேட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச சபையில் இடம்பெற்றது.

(ஐ-111)

## சமய சந்நிதிகளில்

நெடுந்தீவு, ஏப்ரல். 3
நெடுந்தீவு மேற்கு நெழுவினி விநாயகர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

புதுவருடப் பிறப்பான 13ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ - 111)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 3
காரைநகர் மணற்காடு அருள்மிகு ஸ்ரீகும்பநாயகி முத்துமாரி அம்மன்கோயிலின் வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை பகல் 11.00 மணிக்கு நடைபெறும். நாளை செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

[ஐ-30]

★ ★ ★

சண்டிலிப்பாய், ஏப்ரல் 3
மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 17 ஆம் திகதி இரதோற்சவமும், 18 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல்3
அராலி ஆகாயக்குளம் அருள்மிகு ஸ்ரீவிநாயகர் ஆலயத்தின் (மாதாங் கோயில்) வருடாந்த உற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் விசேட அபிஷேகம் பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் பூரணை தினம் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(க-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 3
சண்டிலிப்பாய் சீரணி அருள் மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருக்கோயிலின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மறுநாள்புதன்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 3
அரியாலை அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர் வரும் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலயப்பிரதமகுரு சிவஸ்ரீ தி. சங்கரராசக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

தினசரி மாலை 6-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து சுவாமி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

எதிர் வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு விசேட சங்காபிஷேகம், பூசையும் மாலை 3.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி தெரு வீதி உலாவருதலும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3
திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன ஸம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் எதிர் வரும் வியாழக்கிழமை காலை 8.37 மணிமுதல் 9.01 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரியைகள்நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும். மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிமுதல் அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

(க-111-30)

★ ★ ★

காரைநகர், ஏப்ரல் 3
காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற உள்ளது.

சித்திரைப் புத்தாண்டு தினமான எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்ப்பவனியும் மறுநாள் காலை 6.30 மணிக்கு வியாவில் தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலங்களில் தினமும் பிற்பகல் 4.30 மணிக்கு சமய சொற்பொழிவுகளும் இடம்பெற உள்ளன. (க-73)



இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் 'சிறுவணிக முகாமைத்துவமும் தொழிலுரிமைத் தத்துவமும்' கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று பிராந்திய இயக்குநர் ச.ஞானேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும், திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய இணைப்பாளருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் நா.தணிகாசலம்பிள்ளை உட்பட கல்விசார் சமூகத்தினர் மேடையில் இருப்பதையும் மாணவர் ஒருவருக்கு துணைவேந்தர் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

படங்கள்: பொ.இராஜேஸ்வரன்.

# பாணின் விலையைத் தீர்மானிக்கும் உரிமை பேக்கரிகளுக்கே உண்டு

## அதிகாரிகளுக்குக் கிடையாது என நேற்றைய கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

செயலக அதிகாரிகளுக்கும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினருக்கும் இடையில் அண்மையில் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பாணின் எடை மற்றும் விலைகள் தொடர்பான சங்கத்தின் கணிப்பீட்டின் பிரதியை அவர்களுக்கு வழங்கியிருந்தோம். அதற்கு அமைய பாணின் நிறை குறைந்தால் அதுபற்றி அதிகாரிகள் எம்மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

ஆனால பாணுக்கான விலையைத் தீர்மானிக்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாது. பேக்கரி உரிமையாளர்களுக்கு மட்டுமே அந்த உரிமை உண்டு.

பேக்கரி உரிமையாளர் சங்க யாழ். கிளைத் தலைவர் கே.மரியதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

450 கிராம் பாண் பத்து ரூபாவுக்கு விற்கப்பட வேண்டும் என்று செயலக அதிகாரிகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு கண்டனம் தெரிவிக்குமுகமாக நேற்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கப் பணிமனையில் தலைவர் எஸ். தவராஜலிங்கம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள 96 பேக்கரிகளின் உரிமையாளர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மரியதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பேக்கரி உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரச அதிபருக்கு தொலைநகல் மூலம் செய்தி அனுப்பியுள்ளோம். அவர் இங்கு வந்ததும் எம்மைச் சந்திப்பதாகத் தெரிவித்துள்ளார். அரச அதிபருடனான சந்திப்பில் நிச்சயம் நல்ல முடிவு கிடைக்கும். அவ்வாறு நல்லதொரு முடிவு கிடைக்காத பட்சத்தில் நாம் எமது முடிவைச் செயற்படுத்துவோம் - என்றார்.

மார்ச் 27ஆம் திகதி செயலகத்தில் நடந்த கூட்டத்தில் பத்து ரூபாவுக்கு 450 கிராம் பாணை விற்பனை செய்யவேண்டும் என்று அரச அதிகாரிகள் தெரிவித்தபோதும் அவ்வாறு விற்பனை செய்ய முடியாது என்று அவர்களுக்கு விளக்கிக் கூறினோம். எமது நியாயங்களை அவர்கள் செவிமடுக்கவில்லை. 96 பேக்கரி உரிமையாளர் கொண்ட எமது சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேளாது இரண்டொரு பல நோ.கூ.சங்கங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்டு முடிவெடுப்பதிலேயே அவர்கள் அக்கறை காட்டினார்கள் என்று கூட்டத்தில் உரையாற்றிய சங்கப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

சங்கத்தின் மாவட்டச் செயலாளர் கே.சொலமன் பேசும்போது:-

யுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தி பலதரப்பட்ட வர்த்தக நிறுவனங்களிலும் பொருள்களின் விலைகள் அதிகரித்து விற்கப்படுகின்றன. நேற்று ஆயிரத்து 75 ரூபாவாக விற்ற ஒரு மூடை சீனி இன்று ஆயிரத்து 280 ரூபாவாக விற்கப்படுகின்றது. இது பற்றியெல்லாம் கவலைப்படாத அதிகாரிகள் பாணின் விலை உயர்வில் மட்டும் அக்கறை காட்டுவது ஏன்? 450 கிராம் பாணுக்கு ஏற்படும் செலவு பத்து ரூபா 92 சதம். நாங்கள் 8 சதம் மட்டுமே கூடுதலாகக் கேட்கின்றோம். இந்நிலையில் பத்து ரூபாவுக்கு பாணை எவ்வாறு விற்பனை செய்ய முடியும்? என்றார்.

அரச அதிபருடன் இடம்பெறும் சந்திப்பின்போது சங்கத்தின் பிரச்சினைகள் குறித்து தெளிவாக எடுத்துக் கூறுவதாகவும் -

அந்தச் சந்திப்பின்போதும் நல்லதொரு முடிவு கிட்டாத பட்சத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி குடாநாட்டில் உள்ள சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பேக்கரிக -

(12ஆம் பக்கம் பார்க்க)

# முப்படைத் தளபதிகளையும் இங்கேயே தங்கியிருக்கப் பணிப்பு

கொழும்பு,ஏப்.3

குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பு நிலைமையை அடுத்து முப்படைத் தளபதிகளையும் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

பாதுகாப்பு நிலைவரங்களைக் கண்காணிக்கவும் உடனுக்குடன் முடிவுகளை எடுத்து உத்தரவிட வசதியாகவும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்குமாறு தளபதிகள் கேட்கப்பட்டிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. இதே வேளை இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க வேண்டுமென ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் தீவிரமடைந்திருக்கும் யுத்தத்தில் அரச படையினரை நெறிப்படுத்துவதற்காக கூட்டுப் படைத் தலைமையகத்தின் யாழ். பிராந்திய இணைப்பதிகாரிகளாக இருவர் ஏற்கனவே பதவி ஏற்றிருப்பது தெரிந்ததே. (ஐ)

## மாணவி காயம்

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவி பாலசிங்கம் தர்சினி (வயது 25) என்பவர் காயமடைந்தார்.


## லைடனின் குதூகல மலிவு விற்பனை

புத்திடும் புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!

01-04-2000 முதல் 12-04-2000 வரையுமே!

சகல விதமான ஆடைத் தெரிவுகளுக்கும்
விசேட கழிவு உண்டு
என்றென்றும் உங்கள் தேவையைப்
பூர்த்திசெய்பவர்கள்

லைடன் புடைவை நிலையம்
இல. 4.10. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
(C/11602)

## இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

முகாமைத்துவக் கற்கைகள்
வர்த்தகபீட விளையாட்டு விழாவின்
இறுதி நாள் நிகழ்வு

காலம் : இன்று (03-04-2000) திங்கள்
நேரம் : முற்பகல் 9.30 மணி.
இடம் : கைலாசபதி கலையரங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(75037) - M.C.S.U.

## புலமைப்பரிசில் - 2000

26-04-2000 அன்று நடைபெற்ற பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்றோர்.

| | |
|---|---|
| கை.தனுஷன் | 172 |
| யா.பரி.கல். | |
| வி.யசோதா | 156 |
| யா.இ.ஆ.பா. | |
| ம.நிரோஷன் | 156 |
| ந.பிரிகஷ்வினி | 153 |
| யா.இ.ஆ.பா | |
| த.திவாகர் | 150 |
| யா.பரி.கல். | |
| எ.யோதியா | 150 |
| யா.சுண்டுக்குளி ம.க. | |
| சு.செல்வப்பிரியா | 147 |
| ச.லக்ஷிகா | 145 |
| யா.இ.ஆ.பா. | |
| சி.ஆதிரையன் | 144 |
| யா.இ.ஆ.பா. | |
| ப.தீபா | 144 |
| யா.அச்செழு சை.பி.வித். | |

தபால் மூலம் வினாத்தாள்கள் பெறவிரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

BOND யாழ்நகர். (75031)

## விற்பனைக்கு

15 K.W. டைனமோவுடன் கூடிய LIFTER எஞ்சினும் கிறேசருக்குப் பாவிக்கக்கூடிய BLACK றேன் எஞ்சினும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
ஜெயா தொலைத்தொடர்பு நிலையம்,
காளி கோயிலடி, திருநெல்வேலி. (C/11627)

## 72ஆம் நாள் நினைவும் பிறந்தநாள் நினைவும்

இறைவனின் உன்னதகுரு
அருட்திரு E.J.அருமைநாயகம் (B.A)
(யாழ்.ஆயரின் செயலர்)
03-04-2000

அன்பும், பண்பும் நிறைந்த உள்ளத்துடன் யாழ். அடைக்கல அன்னை ஆலயப்பங்கில் 5 ஆண்டுகளும் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 5 ஆண்டுகளும் புனித மாட்டீனார், புனித சவேரியார் குருமடங்களில் அதிபராகவும் விரிவுரையாளராகவும் இறுதிக்காலங்களில் யாழ். ஆயரின் செயலராகவும் தமது குருத்துவப் பணியைத் தூய உள்ளத்துடன் நிறைவாகச்செய்து, பாசமிகு ஞானத்தந்தையும் ஆன்ம வழிகாட்டியுமாய் விளங்கி இறைவனடி சேர்ந்துள்ள அருமைநாயகம் அடிகளாரின் ஆத்மா இறை சந்நிதானத்தில் இளைப்பாற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

R.சூசைப்பிள்ளை சகோதரர்கள்.
Mr.&Mrs. பீற்றர் சூசைப்பிள்ளை.
P.சர்மி ஜக்குலின்

இல.5, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(75033)

## மறைந்தும் மறையாத அருமைத்தந்தாய் பிறந்தநாள் நினைவு



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1954 - 04 - 03 | 2000 - 01 - 23 |

அருட்தந்தை இ.யோ.அருமைநாயகம்
(யாழ். ஆயரின் செயலர்)

பாரினில் நீர் உதித்த நன்னாளதனில்
பாசமுடன் நாம் வாழ்த்த
பாருலகில் நீர் இல்லையே ~ பார்புகழ்
அதிமதுர அருமைநாயகமே
ஆண்டவன் சந்நிதி ஆர்வமாய் ஏகினீரே!
காரிருள் சூழ் உலகில் கருக்கல்
உதயம் போல் ~ நின்
உதயமும் உலகிற்கு ஒளியே
இறைவனில் நீர் இணைந்திருக்க ~ இனிய நாளதனில்
இறையவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் அன்புள்ளங்கள்
பூவிலிங்கம் குடும்பம்

இல.85, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம்.
(75034)

SALE SALE SALE SALE

விரையுங்கள்

## 'ராம்சில்க்'

* சேட்ஸ் வகைகள் 250/= முதல் 450/= வரை
* றெடிமேட் ரவுசர் 36-38-39-40 250/=
* கவுண் துணிவகைகள்
* றெடிமேட் கவுண்கள், ஸ்கேட் அன் பிளவ்ஸ்
* சாறி 250/= முதல் 750/= வரை
* ரவுசர் துணிகள் 250/= முதல் 450/= வரை

விரையுங்கள்!

'ராம்சில்க்'
109, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
(V.S.B. குறாப் அருகில்)

SALE SALE SALE SALE

(75041)

# பிரபாகரனையும் மாத்தையாவையும் சுடுமாறு டிக்ஷித் உத்தரவிட்டார்

## அமைதிப்படைத் தளபதி ஹர்கிரத்சிங் பேட்டி

புதுடில்லி,ஏப்ரல்3

"இலங்கையில் இந்திய அமைதிப்படையினர் தங்கியிருந்த சமயம் ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனையும் மாத்தையாவையும் சுடுமாறு அப்போதைய இந்தியத் தூதர் ஜே.என்.டிக்ஷித் எனக்கு உத்தரவிட்டார். மன்னிக்கவும், அதைச்செய்ய முடியாது என்று கூறி நான் அதை ஏற்க மறுத்து விட்டேன்."

இந்திய அமைதிப்படைக்கு தலைமைவகித்து வந்த முதலாவது தளபதியான ஜெனரல் ஹர்கிரத்சிங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியப் படைகள் வாபஸ் பெற்று 10 ஆண்டுகள் நிறைவு பெற்றதை ஒட்டி (மார்ச் 23) இந்தியாவின் இன்ரநெற் செய்திச் சேவை நிறுவனம் ஒன்று முக்கிய இந்தியப் பிரமுகர்களை செவ்வி கண்டு அவற்றை வெளியிட்டு வருகிறது.

"இந்தியாவின் வியட்நாம் இலங்கையில் இந்திய அமைதிப்படை" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட இந்த விசேட நிகழ்ச்சியில் முன்னாள் தூதர் டிக்ஷித்தின் பேட்டி ஏற்கனவே வெளியாகி இருந்தது.

"ஒருநாள் நள்ளிரவு 12 மணிக்கு பிரபாகரனும் மாத்தையாவும் என்னைச் சந்திக்க வந்திருந்த சமயம் இருவரையும் சுட்டுத் தீர்க்குமாறு டிக்ஷித் எனக்கு உத்தரவிட்டார். மன்னிக்கவும் அதைச் செய்ய என்னால் முடியாது எனக்கூறி நான் மறுத்தேன். உத்தரவை நிறைவேற்றுமாறு மீண்டும் மீண்டும் அவர் என்னை வற்புறுத்தினார். வெள்ளைக் கொடியின் கீழே அவர்கள் என்னைச் சந்திக்க வந்துள்ளனர். எனவே இந்த உத்தரவை என்னால் ஏற்க முடியாது எனத் தெளிவாக அவரிடம் கூறிவிட்டேன்" என்று ஜெனரல் ஹர்கிரத்சிங் அப்பேட்டியில் கூறியுள்ளார்.

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நஞ்சருந்தி உயிரிழக்கக் காரணமான சம்பவம் பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது -

அவர்களது மரணத்துக்கு இந்திய இராஜதந்திரிகளும், இந்திய இராணுவத் தலைமையக அதிகாரிகளுமே காரணம். இலங்கைப்படையினர் கைகட்டிப் பார்த்து நிற்க அவர்கள் 12 பேரையும் கவச வாகனம் ஒன்றில் ஏற்றி பலாலித் தளத்திற்கு வெளியே கொண்டுவந்திருக்க முடியும். அவர்களைப் பாதுகாப்பதில் எந்தப் பிரச்சினையும் எனக்கு இருக்கவில்லை" என்று கூறினார்.

போர் வெடித்த பின்னரும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தீர்களா என அவரிடம் கேட்கப்பட்டதற்கு -

"ஆம்... சண்டை மூண்டபிறகும் தொடர்பு வைத்திருந்தேன். அவருடன் தொடர்பு கொண்டு வந்தேன். சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரே மனிதர் அவரே என்பதால் அவருடன் தொடர்புகளை வைத்திருந்தேன்" என்று ஹர்கிரத்சிங் கூறினார்.

(ஐ)

## தடைகாண் பரீட்சை 16 பேர் சித்தி

திருநெல்வேலி,ஏப்ரல்3

கடந்த வருடம் நடைபெற்ற தரம் இரண்டு "ஏ" பிரிவிலுள்ள குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றிய 19 பேரில் 16 பேர் சித்தியடைந்துள்ளனர். மூன்று பேர் நான சித்தி பெற்றுள்ளனர்.

யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் கடந்த வருடம் ஜனவரி 17ஆம் திகதி நடத்தப்பட்ட இப் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த வாரம் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர்பணிமனைக்கு கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இந்த வருடம் நடைபெறவுள்ள இவர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைக்கு நாளை 4ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-135)

# விமானப்படைத் தளம் மீது மட்டக்களப்பில் ஷெல் வீச்சு!

மட்டக்களப்பு,ஏப்ரல்3

மட்டக்களப்பு விமானப்படைத்தளத்தின் மீது நேற்று மாலை 5.40 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

விமானப்படைத் தளத்தில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்த போதிலும் எந்த சேதமும் ஏற்படவில்லை. விமானப்படைத் தளத்துக்கு மேற்கே படுவான்கரைப்பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து விமானப்படைத்தளத்திலிருந்தும் வவுணதீவு இராணுவ முகாமிலிருந்தும் படையினர் படுவான்கரையை நோக்கி பலத்த ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மட்டக்களப்பு விமானப்படைத் தளத்தைச் சூழ உள்ள பகுதிகளில் பதற்றம் நிலவியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

(இ-3-21)

# வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 1172 குடும்பங்களுக்கு நிவாரணம்

நெல்லியடி,ஏப்ரல்3

வடமராட்சி கிழக்கில் இருந்து அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்திருக்கும் 1172 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 255 பேருக்கும் ஏப்ரல் மாத முதலாம்கட்ட உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட இருக்கின்றது.

இத்தகவலை தும்பளையில் இயங்கும் மருதங்கேணி பிரதேச செயலர் வி.வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

செம்பியன் பற்று வடக்கு,தெற்கு, நாகர் கோயில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மருதங்கேணி , வத்திராயன் போன்ற இடங்களில் இருந்து வெளியேறியவர்களுள் சுமார் 4 ஆயிரத்து 255 பேர் தமது பெயர் விவரங்களை இந்த அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

வடமராட்சியில் பருத்தித்துறை அந்தோனியார் ஆலயம், தும்பளை லூர்த்து மாதா கோவில், கற்கோவளம் செபஸ்தியார் கோயில் மற்றும் உற்றார்; உறவினர் வீடுகளில் 650 குடும்பங்களும் அம்பன் குடத்தனைப் பகுதிகளில் 350 குடும்பங்களும் மேலும் வெவ்வேறு இடங்களில் 171 குடும்பங்களும் வசிப்பதாகவும் அறியமுடிகின்றது.

இந்நிலையில் வடமராட்சியில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு நேற்று முதல் மருதங்கேணி பிரதேச செயலரினால் மூன்று நாள் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

தும்பளையில் தற்காலிக ப.நோ.கூ.சங்கம் அமைக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்குரிய ஏப்ரல்மாத இடம்பெயர் நிவாரண பெர்மிட் வழங்கப்பட்டது. தும்பளையில் ப.நோ. கூட்டுறவு சங்கக்கிளை ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் நிலைமை சீராகும் வரை உலர் உணவு நிவாரணத்தை தொடர்ந்து வழங்க யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விட்டு இருப்பதாக மருதங்கேணி பிரதேச செயலர் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனை பகுதிகளில் வசிக்கும் இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் தமக்குரிய ஏப்ரல்மாத உலர் உணவு நிவாரண பெர்மிட்டை இன்று தொடக்கம் அம்பன் கிராம சேவை அலுவலர் எஸ்.சிவலிங்கத்திடம் சென்று பெற்றுக் கொள்ளுமாறும் வடமராட்சிக்கு இடம் பெயராத செம்பியன்பற்று வடக்குதெற்கு மருதங்கேணி, வத்திராயன் பகுதி மக்கள் செம்பியன் பற்று தெற்கு கிராமசேவை அலுவலர் ரி.நடராஜா விடமிருந்து பெமிட்டுக்களை பெறலாம் என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதேவேளை பளைப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் தஞ்சமடைபவர்களுக்குரிய நிவாரண ஒழுங்குகளை பருத்தித்துறை பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார்.

(இ-109)

## பல் வைத்தியர்

சண்டிலிப்பாய்,ஏப்ரல்3

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு பற் சிகிச்சை டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருமாத காலம் இங்கு கடமையாற்றிய பின்னர் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் இவர் பணியாற்ற செல்லவேண்டும் என்று யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

(இ-135)

## விசாரணை முடிவடையும் வரை

# அன்ரனோவ் விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தத் தடை!

கொழும்பு,ஏப்ரல்3

நீர்கொழும்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களில் அண்மையில் விமானங்கள் வீழ்ந்து நொறுங்கியமை தொடர்பான விசாரணைகள் முடிவடையும் வரை அன்ரனோவ்ரக விமானங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டாம் என்று சிவில் நிர்வாகப் போக்குவரத்துச்சபை பிரதித் தலைவர் மொறிஸ் பெனாண்டோ அறிவுறுத்தியுள்ளார்.

இந்த இரு சம்பவங்களிலும் அன்ரனோவ் ரக விமானங்களே வீழ்ந்து நொறுங்கியுள்ளன.

இந்த ரக விமானங்கள் வீழ்ந்தமை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே அந்த விசாரணைகள் முடிவடையும்வரை இந்தரக விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டாம் என்று அவர் அறிவித்தலை விடுத்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு தைத்த உடுப்புக்களை ஏற்றுமதி செய்வதற்கு பல நிறுவனங்கள் இந்த ரக விமானங்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விமானப்படையினரும் இந்த ரக விமானங்களைப் பாவிப்பதைத் தடை செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## குரு பூசை

யாழ்ப்பாணம்,ஏப்ரல்3

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகளின் 19ஆவது ஆண்டு குருபூசை ஆராதனை விழா இம்மாதம் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாகபூசை மற்றும் சங்காபிஷேகம், திருமுறை, அர்ச்சனை என்பனவும் அகில இலங்கைத்திருமுறை மன்றத்தினர் வழங்கும் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கும் இடம் பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு பெரியபுராணம் புராணப்படிப்பும் இடம்பெறும்.

(இ-7)

## ராஜகிரியவில் கொல்லப்பட்ட

# எட்டுப் பேரின் தலைகளை பேணிப் பாதுகாக்க உத்தரவு

கொழும்பு,ஏப்ரல்3

கொழும்பு ராஜகிரியவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் மற்றும் மோதல் சம்பவங்களில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் எனச்சந்தேகிக்கப்படும் எட்டுப்பேரின் தலைகளை மட்டும் பேணிப் பாதுகாப்பாக வைக்குமாறும் உடல்களை அடக்கம் செய்யுமாறும் கொழும்பு மாவட்ட பிரதம நீதிபதி டி.குலதிலக மருத்துவ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

மேலதிக விசாரணைகளுக்காக தலைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் சடலங்களை பிரேத பரிசோதனையின் பின் அடக்கம் செய்யுமாறும் அவர் உத்தரவிட்டார்.

(ஐ)

# உக்ரைன் நிபுணர்கள் இலங்கை வருகின்றனர்

கொழும்பு,ஏப்ரல்3

கடந்த வியாழக்கிழமை அனுராதபுரத்துக்கு அருகே அன்ரனோவ்-26 ரக விமானம் வீழ்ந்து நொறுங்கியது தொடர்பான விசாரணைகளை நடத்த உக்ரைன் நாட்டு நிபுணர்கள் இன்று இலங்கை வருகின்றனர்.

இவர்கள் ஒருவாரம் இலங்கையில் தங்கியிருப்பர்.

விமானப் படைத் தளபதி நியமித்துள்ள நால்வர் அடங்கிய குழு மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு இவர்கள் உதவி வழங்குவர்.

விமானத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட கறுப்புப் பெட்டியில் உள்ள தகவல்களை இவர்கள் ஆராய்வர்.

தொழில்நுட்பக் கோளாறே விமானம் வீழ்ந்தமைக்குக் காரணம் என அந்தக் கறுப்புப் பெட்டியை ஆராய்ந்ததில் தெரியவந்ததாக விமானப் படைப் பேச்சாளர் டபிள்யூ.என்.கே.ஆர்.விஜயகந்தர தெரிவித்தார்.

கறுப்புப்பெட்டி மேல் விசாரணைக்காக உக்ரைனுக்கு அனுப்பப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தகவல் வெளியிட்டார்.

(இ-க-3)

## ரோந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தின் போது கொல்லப்பட்ட விசேட அதிரடிப் படையினர் ஒருவரின் சடலத்தை நேற்றுமாலை கொக்கட்டிச் சோலைச் சந்தியில் மக்கள் பார்வைக்கு, விடுதலைப் புலிகள் வைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கோரினால் சடலத்தை கையளிக்கத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(இ-8-21)

## பாணின்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும் பாண் உற்பத்தியை நிறுத்தி வேலைநிறுத்தத்தில் குதிப்பதெனவும் -

சங்கத்தின் மேற்படி தீர்மானங்களை மீறுபவர்களை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதெனவும் - ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(இ-9-111)

## மேலும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவு), செல்வி விஜிதா ஜெயநாயகி செபமாலை (நெடுந்தீவு), துரைராஜா சுஜந்தன் (திருநெல்வேலி), திரு ஞானசம்பந்தமூர்த்தி சூரியகாந்தன் (நாரந்தனை), காசிநாதன் சுகேந்திரன் (மண்டைதீவு), செல்வி ஜெயகௌரி திருநாவுக்கரசு (புளியங்கூடல்).

(இ-7)


வீடியோ CD வெளியீடு
பிரகாஷ்ராஜ் நடித்த
* குருபிரம்மா
திரையரங்குக்கு முன்னுரிமை
புதிய போஸ்ரர்கள் விற்பனைக்கு உண்டு.
விஷ்ணு வீடியோ
K.K.S. வீதி,
கோண்டாவில்.
(75040)

A/L 2000
கணக்கீடு
D. SAM
கிரயக்கணக்கீடு
ஆரம்பம்:-
08-04-2000
பிரிவு - I - 12 - 1
பிரிவு - II - 1 - 2
D. M. I.
யாழ் நகர்.
* அனுமதிகளை முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
(C/11561)


# வல்லைக்கடலில் மீன்பிடிக்க 72 மணிநேரம் தடை

யாழ்ப்பாணம்,ஏப்ரல்3

வல்லைக்கடலில் இறங்கி மீன் பிடிப்பதற்கு நேற்று முன்தினம் முதல் 72மணி நேர தடை படையினரால் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீனவர் எவரையும் கடற்கரைப் பகுதிக்கு வரவேண்டாம் என்றும் உத்தரவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப் பகுதி மீனவர்கள் கடலில் விட்ட தமது வலைகளை மீட்க அனுமதி பெற்றுத் தருமாறு அச்சுவேலிப் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் யூ.எல்.ரவியிடம் கோரிக்கை விடுத்தனர்.

அவர் 511வது பிரிகேட் அதிகாரியுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து வலைகளை மீட்பதற்கு இரண்டு மணிநேர அவகாசம் வழங்கப்பட்டது.

(இ-9-178)

# கண்காணிப்புக் குழுவால் கசிப்பு கண்டுபிடிப்பு

வலிகிழக்கு,ஏப்ரல்3

கொக்குவில் மேற்கில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களின் வீடு, அப்பகுதி கண்காணிப்புக் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டு அங்கிருந்த கசிப்பு உற்பத்திப் பொருள்களும் கசிப்பும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

கொக்குவில் மேற்குப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கிராம சேவையாளரின் அனுமதியுடன் அப்பகுதி மக்களால் அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

(இ-180)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.